
# நபியே எங்கள் நாயகமே!

நந்நபி வாழ்த்துப் பாமாலை



TNSDA
08436

கவி. கா. மு. ஷெரீப்

# செஞ்சொற் கவிதைகள்

இறை வாழ்த்துடன் தொடங்கும் இந் நூலில், நபிகள் நாயகம் (சல்) அவர்களின் போதனைகள், பழகு தமிழில், அழகு மிளிர செஞ்சொற் கவிதைகளாக வடிவெடுத்துள்ளன.

நெஞ்சினிக்கும் அக்கவிதைகளை வடித்திருப்பவர், தமிழ் கூறும் நல்லுலகிற்கு நன்கு அறிமுகமான மூத்த கவிஞர் கவி காமு ஷெரீப் ஆவார்.

எளிய இனிய நடையில் கவிதைகளை எழுதியுள்ளார். தென்றலென நடைபோடும் கவிதைகள் நம்மைச் சிந்திக்க வைக்கின்றன தெளிவடையச் செய்கின்றன. நூலைப் படித்து முடித்ததும் ஒரு சில நிமிடங்களிலேயே நாயகமவர்களின் நற்போதனைகளை அறிந்து கொண்ட மன நிறைவு ஏற்படுகிறது.

கவிதை நயம் சொட்டும் அண்ணல் நபியின் போதனைகள் அடங்கிய இந்நூலை முஸ்லிம் பெருமக்கள் மட்டுமின்றி தமிழறிந்த அனைவரும் வாங்கிப் படித்துப் பயனடைய அவாவுகின்றோம்.

கோலாலம்பூர் ''தமிழ் மலர்'' (நாளேடு)
10—9—72 கோலாலம்பூர்

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

# நபியே எங்கள் நாயகமே!

கலைமாமணி
கவிகா.மு.ஷெரீப்

சீதக்காதி நூல் வெளியீட்டகம்
21, பச்சையப்பச் செட்டித் தெரு, சென்னை-2.

முதற் பதிப்பு : மார்ச், 1972
இரண்டாம் பதிப்பு : ஆகஸ்ட், 1973
மூன்றும் பதிப்பு : மே, 1984
உரிமை பதிவு செய்யப்பட்டது

பக்கங்கள் 30 + 114 = 144
கிரவுன் $12\frac{1}{2} \times 18\frac{3}{4}$ cm

தொல் பொருள்
எண் 8436
தேதி 22/9/87
சென்னை

விலை. ரூ. 10-00

ஜீவன் பிரஸ், சென்னை-600 005

# ஆய்ந்துரை

## (மௌலவி M. அப்துல் வஹ்ஹாப் M.A.,B.TH.)

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்

நஹ்மதுஹூவ நுஸல்லீ அலா ரஸூலிஹில், கரீம்

அனைத்துலகங்களுக்கும் அருட்கொடையாய், மனித வாழ்க்கையின் இலட்சிய நாயகராய், மக்கள் குலம் என்றென்றும் பின்பற்றி நடக்கவல்ல நல்வழி காட்டியாய், பகைவரையும் அன்புக்கரம் நீட்டி ஆதரித்த வள்ளல் பெருமானாராய், பெண்ணினத்தின் இடர் தீர்க்க வந்த பெருமைக்குரிய தோழராய்—உலக வாழ்க்கையின் ஒவ்வொரு துறைக்கும் ஓரழகிய முன் மாதிரியாய்—ஆயிரத்து நானூறு ஆண்டுகட்கு முன்னர் இவ்வுலகில் தோன்றிய உத்தமத் திருநபி எம்பெருமானார் முஹம்மது ரஸூல் (ஸல்) அவர்களைப் பற்றிப் பல்லாயிரக்கனக்கான எழுத்தோவியங்கள் தீட்டப்பட்டுள்ளன.

காவியமாய், காப்பியமாய், சந்தப் பாக்களாய், உரை நடை நூற்களாய் — இன்னமுள்ள இலக்கிய வடிவங்களாய் இறுதித் தூதரின் எழிலார் திரு வாழ்வு வரையப்பட்டுக் கொண்டே வருகின்றது. எழுத்தில் இலங்குவது — இயங்குவது மட்டு மல்லாமல், மக்கள் நெஞ்சிலும் நினைவிலும் நீங்கா இடம் பெற்றுள்ள தலைவர் எம்பெருமானார் ரஸூல் (ஸல்) அவர்கள்தாம். தொழுகையிலும், இதர வணக்கங்களிலும் ஒவ்வொரு நாளும்—உலகத்தின் ஒவ்வொரு கோணத்திலும் கோடிக்கணக்கான மக்கள் அவர்கள் திருப்பெயரை நினைவு கூர்ந்து கொண்டே இருக்கின்றனர். முஹம்மது, அஹ்மது, மஹ்மூது, ஹாமிது, தாஹா, யாஸீன் போன்ற அவர்களின் பல்வேறு பெயர்களைத் தம் குழந்தைகட்கு இட்டு, அன்னாரின் நினைவை என்றென்றும் பசுமையாக்கி வருகின்றனர்.

இதில் வியப்பில்லைதான். ஏனென்றால், அல்லாஹு தஆலாவே தன் தூய திருமறையில்,

''ரபஃஞலகதிக்ரக''— (முஹம்மதே) உம் புகழை நாமே உயர்த்துவோம்—என்று உறுதியளித்த! பின், அவனுடைய நல்லடியார்கள் அப்பெருமானாரின் திருப்பெயரை—நிறை புகழை — சங்கைப் படுத்து வதில் வியப்பென்ன இருக்கிறது?

'முஹம்மது' என்றாலே 'புகழுடையவர்' என்று தான் பொருள். அந்தப் புகழ் பதினான்கு நூற்றாண்டுகளாக மங்காமல் மறையாமல், வாடாமல், வளங்குன்றாமல் இருக்கும் இரகசியம் என்ன? அதைத்தான் பெருங்கவிஞர்களும், உரை நூல் வல்லுனர்களும், சொல்லேருழவர்களும் தத்தம் ஆற்றலுக்கும், ஈடு பாட்டுக்கும் தக்கவாறு எழுதியும், எடுத்துரைத்தும் வருகின்றனர்.

இத்தகு புகழ் மணக்கும் இலக்கியப் பணியின் தொடரில், சிறப்புமிக்க ஒரு கவிதைப் படைப்பாக விளங்குகிறது சகோதரர் கவி கா மு ஷரீப் அவர் களின் '' **நபியே ! எங்கள் நாயகமே!** என்னும் அரிய நூல். பெருமானார் (ஸல்) அவர்களின் வரலாற்றில் ஆசிரியருக்குள்ள ஈடுபாடு ஒவ்வொரு பாட்டிலும் நெஞ்சைத் தொடும்வண்ணம் புலப்படுகிறது. முஹம்மதுர் ரஸூல் (ஸல்) அவர்களின் ஆத்மீகப் பாரம்பரியத்தை அழகுபட எடுத்துரைக்கும் கவிஞர், 'எழிலார்ந்த ரமலானில் ஹிராமலை சென்று வாகுடனே தனித் தியானம்' செய்துவந்த பெருமானாரின் பாட்டனார் அப்துல் முத்தலிபையும் பொருத்தமாகக் குறிப்பிடுகிறார்கள்.

பெருமானாரைப் போற்றும்போது, அவர் களுடைய சுற்றமும் நட்பும் போற்ற வாழ்த்துவது இஸ்லாமிய இலக்கிய மரபு. அதையொட்டி, கவிஞர் யாத்துள்ள அனைத்துப் பாடல்களும் அப் பெருமக்களின் சிறப்பினைச் சுருங்கக் கூறி விளங்க வைக்கின்றன.

பாடல்கள் முழுவதும் வெறும் சொல்லடுக்கு களாகவோ, அலங்காரமாகவோ இல்லாமல்; பெருமானாரின் வாழ்க்கை நெறிகளை ஐயந்திரிபறப் புலப்படுத்தும் வரலாற்று நிகழ்ச்சிகளைக் குறிப்பிடு வனவாக அமைந்துள்ளன. இவ்வரலாற்று நிகழ்ச்சி

களைக் காவியமாக்கி, ஈற்றடியில் அத்தகைய வரலாற்றுச் சிறப்புடைய வள்ளல் பெருமகனுரை, **"முஹம்மதரே வாழியரோ வாழி!"** என்று சிறப்பித்திருப்பது என்றென்றும் நெஞ்சில் நிலைத்திருக்க வல்லது.

> **"கொள்கைதனைப் பணத்திற்காய் பதவிக்காய் விட்டுக்**
> **கோணல்வழிச் சுகவாழ்வு வாழ நினைக்காமல்"**

பெருகி வந்த கொடுமையெல்லாம் திரணமாய் எண்ணி, உறுதியுடன் அவற்ருேடு போராடி, "உலகினரை நல்லவராய் ஆக்கவந்த" உத்தமரைப் போற்றிடும் ஒவ்வொரு பாடலும் திருப்பித் திருப்பிப் பாடி ரசிக்கக் கூடியதாக அமைந்துள்ளது.

ஆட்சிக்கும் மதத்துக்கும் தலைவரா யிருந்தும், அஹ்மது நன்னபியவர்கள் வாழ்ந்த எளிய வாழ்க்கையைக் கவிஞர் வர்ணிக்கும்போது, இன்றைய ஆட்சியாளர்கள் பின்பற்றவேண்டிய எத்தனை அருமையான முன்மாதிரியாக எம் பெருமானுரவர்கள் இலங்குகிருர்களென்ற ,இனிய உணர்வு நம்மை இறும்பூதெய்த வைக்கிறது.

இருபத்துமூன்று ஆண்டு கால இடையருப் பிரச்சாரத்தின் பயனுய், கொள்ளையும் கொலையும் மலிந்து கிடந்த அரபு நாடு எவ்வாறு திருந்தி, உலகை வழி நடத்திச் செல்லும் உன்னத நிலையை எய்திற்று என்று கவிஞர் வர்ணிக்கும் பாடல்கள் எழுத்தாற்றலின் எழிலார்ந்த எடுத்துக்காட்டுகளாகும்.

இவ்வாறு இந்நூலில் உள்ள ஒவ்வொரு பாடலையும் பற்றி—அதன் சீர் சிறப்பினைப் பற்றி மகிழ்ச்சியுடன் பாராட்டிக்கொண்டே போகலாம். ஆனுல், கவிதையின் கன்னல் நிகர் சுவையை வாசகர்கள் நேராகவே சுவைத்திடுதல் பொருத்தமுடையதல்லவா?

ஹலரத் ஹஸ்ஸானுப்னுதாபித் (ரலி) அவர்களின் மங்காப் புகழ் படைத்த மாகவிதையைப்

பாராட்டிய நபிகள் பெருமானார், ''இன்னல்லாஹ யுஅய்யிது ஹஸ்ஸான (ன்) பிரூஹில் குதுஸி''— திடமாக, புனித இறையுணர்வைக்கொண்டு அல்லாஹு தஆலா ஹஸ்ஸானுக்கு உதவி செய்கிறான்- என்று குறிப்பிட்டார்கள்.

''நலம் விளையும் கவிதை புனைபவன் நாயனால் தூண்டப்படுகிறான், அவன் கவிதை ஆண்டவனின் நல்லருளாகும்'' என்பதே இதன் விழுமிய கருத்தாகும். அத்தகைய கவிதைப் பாரம்பரியத்தில் பங்கு கொள்கிறது, சிறப்புமிக்க இந்நூல். இதனைச் சுவைக்க, இதன் காவிய மணத்தை நுகர, இதன் வரலாற்றுப் பின்னணியை ரசிக்க, வளமார் கருத்துக்களைப் பருக வாருங்கள் என்று வாசகர்களை அழைப்பதில் பெருமித மடைகிறேன்.

**''என்னெழுத்தைப்படிப்பவர்கள் எந்நாளும் வாழ்வில்**
**ஏற்றம் பெற இறைவனைத் துதித்திடுவாய் நெஞ்சே!'**

என்று கவிஞர் வாசகர்களுக்காக உளம் உருகச் செய்யும்'துஆ'வுக்கு: ''ஆமீன்'' என்று கூறி, ''இத்தகைய அருங் கவிதையை, அழகுக் கவிதையை — 'சுவை புதிது, பொருள் புதிது; வளம் புதிது; சோதிமிக்க நவகவிதை; எந்நாளும் மாளாத மா கவிதை' என்று பிறிதொரு கவிஞன் வர்ணித்த இலக்கிய வரிசையில் இடம்பெறும் உயர் கவிதையை — இயற்றித் தந்த ஆசிரியரும், என்றும் ஏற்றம் பெற்றவராக, இலக்கியத்தின் வாயிலாக இறைபணி செய்பவராக வாழ அருள் செய்வாய் இறைவா!'' என்றும் இறைஞ்சி முடிக்கின்றேன்.

ஆலந்தூர் **எம். அப்துல் வஹ்ஹாப்.**

சென்னை - 16.

16—12—1391.

---

2—2—1972.

# பாராட்டுரை

எல்லாம் வல்ல இறைவனுக்கே புகழனைத்தும். சாந்தியும், சமாதானமும் அண்ணலார் (ஸல்) அவர்கள் மீதும் அவர்கள் தம் தோழர்கள் மீதும் உண்டாகட்டும்.

இருலோகத்தூதர் அண்ணல் அஹ்மதுநபி (ஸல்) அவர்களின் வாழ்வு, வாக்கு, இவைகளைக் கவி நடையிலும், காவிய நடையிலும் சித்திரிக்கும் நூல்கள் தேன்சொட்டும் தமிழ் மொழியில் பல உண்டு.

நம் கவி கா மு ஷரீப் அவர்கள் படைத்த ''நபியே! எங்கள் நாயகமே'' என்ற கவிதை நடையில் அமையப் பெற்ற நூல் என் பார்வைக்கு எட்டியதும் படித்தேன் பரவசமடைந்தேன்.

தமிழில் போதிய அளவு திறன்படாத சிறுவர்களும் தாய்மார்களும் கூட படித்து இன்புறும் அளவில் அமையப்பெற்றுள்ளது.

பெருமானாரின் பெருவாழ்வை, பெருவாக்கை, நயமுடன் நல்ல தமிழில் சித்தரிக்கும் நூலின் ஆசிரியர் கவி கா மு ஷரீப் அவர்களை பாராட்டுகிறேன்.

இந்நூல் மக்களிடையே பரவி மக்கள் அதனுல் பெரும் பயனடைய எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகிறேன், ஆமீன்.

**மௌலவி A. அப்துல் ஜலீல்**

27-2-72 — பொதுச் செயலாளர்

சிங்கப்பூர்-7 — தென்னிந்திய ஜம்இய்யத்துல் உலமா.

சென்னை உயர்நீதி மன்ற முன்னாள் தலைமை நீதிபதி, ஆலிஜனாப் எம். எம். இஸ்மாயீல் சாகிப் அவர்களின்

# அணிந்துரை

சென்ற ஆயிரத்து நானூறு ஆண்டுகளாக நபிகள் நாயகம் முஹம்மது (சல்) அவர்களைப் பற்றி எண்ணற்ற எழுத்தோவியங்கள் பிறந்திருக்கின்றன. உலகிலுள்ள மொழிகள் அனைத்திலும் அவ்வம்மொழி வல்லுனர்கள் இந்த ஓவியங்களைத் தீட்டியிருக்கிறார்கள். காலம், தேசம், மொழி எல்லாவற்றுக்கும் அப்பாற்பட்ட மனித வாழ்க்கையின் அடிப்படை ஒழுக்க நெறியை அழகுற எடுத்துரைத்து வாழ்ந்து காட்டிய உத்தமராகையால் உலகின் எல்லாப் பாகங்களிலும் வாழும் அறிஞர் பெரு மக்கள் தத்தம் மொழியில் இதனைச் செய்திருக்கிறார்கள். உலக வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் வாழும் முறைக்கு இலக்கணமாக அவர்களுடைய வாழ்வு அமைந்திருந்ததன் காரணமாக பல துறையின் கோணங்களிலிருந்தும் அப்பெருமானாரின் வாழ்க்கையை அறிஞர்கள் ஆராய்ந்திருக்கிறார்கள். அவர்களின் வாழ்க்கையை சரித்திர வல்லுனர்கள் சரித்திரமாகவும் தத்துவத் துறைத் தலைவர்கள் அற நூலாகவும் மார்க்க மேதைகள் சமய விளக்கமாகவும் கவிஞர்கள் காப்பியமாகவும் இயற்றியிருக்கிறார்கள். காப்பியங்களாகச் செய்தவர்கள் பல்வேறு பாணிகளிலும் அதை அமைத்திருக்கிறார்கள்.

இவை அனைத்துக்கும் பொருத்தமாக அமைந்திருப்பதுதான் பெருமானாரவர்களின் இயம்பற்கரிய பெருமையாகும். இதற்குக் காரணம், நபிகள் பெருமானவர்கள் மனித வர்க்கத்தின் ஒரு குறிப்பிட்ட பகுதிக்கோ பிரிவுக்கோ தலைவராக—வழிகாட்டியாக—முன்மாதிரியாக—இலக்கணமாக அமைந்திராமல், அகில உலகுக்கும் சீரிய வாழ்க்கை நடத்துவதற்கு ஓர் ஒப்புயர்வற்ற முன்மாதிரியாக அமைந்து விட்டதேயாகும். பிரபஞ்சங்கள் அனைத்துக்கும் தலைவனான இறைவன் அப் பிரபஞ்சங்களுக்குத் தன்னுடைய அருட்

கொடையாகவே நபிகள் பெருமானாரை அனுப்பி வைத்தான். ஆகவேதான், பிரபஞ்சம் அனைத்திலும், என்றும் வாழும் வாழ்க்கைக்கு வழிகாட்டியாக நபிகள் நாயகமவர்களின் சொல்லும் செயலும் அமைந்து விட்டன.

அந்நாயகமவர்களின் வாழ்க்கை பற்றியும் உபதேசம் பற்றியும் தமிழிலும் பல நூல்கள் உண்டாகியிருக்கின்றன. வசனமாகவும், கவிதையாகவும், அறிவும் ஆர்வமும் அக்கறையும் நிறைந்த பல முஸ்லிம்கள் இப்பணியைச் செய்திருக்கிறார்கள். இப்போது, கவி கா மு ஷரீப் அவர்கள் ''நபியே எங்கள் நாயகமே'' என்னும் இந்த வாழ்த்துப் பாமாலையை ஆக்கியிருக்கிறார்கள். நபிகள் நாயகமவர்களின் வாழ்க்கையில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளைத் தொடர்ச்சியாக எடுத்துப் பாடாமல் அப்பெருமானாரவர்களின் போதனைகளில் இன்றைய வாழ்க்கைக்கு உடனடியாகப் பொருந்தக் கூடியவைகளை அழகிய கவிதை வடிவில் தீட்டியிருக்கிறார்கள். செயல் அனைத்துக்கும் அதற்கு ஆதரவாக இருக்கும், அதனை உந்தச் செய்யும் எண்ணமே உரைகல் என்பது நாயகமவர்களின் போதனையின் அடிப்படைத் தத்துவமாகும். இதைத்தான் கவிஞரவர்கள்,

''எண்ணத்தில் தீதெண்ணி இயலாமை யாலே
எண்ணத்தை நிறைவேற்ற முடியாதிருப்போன்
மண்ணகத்தில் தீச்செயலைச் செய்தவனேயாவான்''

என்று நாயகமவர்களின் உபதேசங்களில் ஒன்றாக எடுத்துக் காட்டுகிறார்கள். ஈகை, கொடை என்பன இஸ்லாத்தாலும்நாயகமவர்களாலும் திரும்பத்திரும்ப பாராட்டப்பட்ட பண்புகளாகும். அதே சமயத்தில், வறுமையின் காரணமாக, உழைக்கும் உடல்திறம் இருந்த போதினும் பிச்சை எடுத்து வாழும் கேவல வாழ்க்கை கண்டிக்கப்பட்டிருக்கிறது. பிச்சை எடுத்துப் பிழைக்கும் சிறுமை நிறைந்த வாழ்விலிருந்து பலரை மீட்டுத் திருத்திய சம்பவங்கள் பல நாயகம் அவர்களின் வாழ்க்கையில் காணப்படுகின்றன. இந்த சம்பவங்களிலிருந்து பெறப்படும் நீதியைத்தான் கவிஞர் காமு ஷரீப் அவர்கள்,

"வறுமையிலே வாடிமிக நொந்து கெட்டபோதும்
மானிடரே கையேந்தி இரந்திடல் செய்யாதீர்
சிறுமையது மட்டுமன்று காலமெலாம் அந்தச்
சீரழிவி லிருந்து நீர் விடுபடவே மாட்டீர்
வெறுத்திடுவார் மாந்தரும்மை ஆதலினல் நீவீர்
மிகச்சிறிய அளவிலேனும் தொழிற்செய்ய
முயல்வீர்"

என்று எடுத்துக் காட்டுகிருர்கள்.

வெறும் சடங்குகளினுல் மாத்திரம் ஒருவன் முஸ்லிமாகிவிட முடியாது. பிற மனிதர்களிடமும் பிற உயிர்களிடமும் எவன் அன்புடனும், கருணையுடனும், நியாய உணர்ச்சியுடனும் பழகுகிருனே அவன்தான் உண்மையான முஸ்லிம் என்று பற்பல உதாரணங்களைக் கொண்டு நாயகமவர்கள் எடுத்துக்காட்டியிருக்கிருர்கள். இந்த அன்புக்கும் கருணைக்கும் நியாய உணர்ச்சிக்கும் முஸ்லிம், முஸ்லிமல்லாதார் என்ற வேறுபாடே இல்லை. ஏக இறைவனுடைய எல்லாப் படைப்புகளுக்குமே இந்தப் பண்புகளைப்பற்றிக் கேட்க, கோர உரிமையுண்டு. எந்த ஒரு மனிதன் தன் அயலானிடத்தில் நியாயத்துடனும் நேர்மையுடனும் நட்புடனும் நடந்து கொள்ளவில்லையோ அவன் நல்லவனுகவோ முஸ்லிமாகவோ இருக்கமுடியாது என்று நாயகமவர்கள் பகர்ந்திருக்கிருர்கள். இதனைத் தான் கவிஞரவர்கள்,

"மானிடரில் நல்லவர்கள் யாரென்றே யோர்நாள்
வள்ளலேநும் மிடத்தினிலே சகாபாக்கள் கேட்க
தானிருக்கும் வீட்டருகே வாழ்ந்திருக்கும் மாந்தர்
தக்கவரென் றுரைக்கும்படி வாழ்பவரே
என்றீர்".

என்று நாயகமவர்களைப் பற்றிப் பாடுகிருர்கள்.

நாணயத்துடனும் கண்ணியத்துடனும் கடமையுணர்வுடனும் செய்யப்படும் எந்தத் தொழிலும் சிறப்புடையதேயாம். செருப்புத் தைப்போனும், தோட்டியும், முடி திருத்துபவனும், தாங்கள் செய்யும் தொழிலினுல் வேறு எவர்க்கும் எந்த விதத்திலும் தாழ்ந்தவராக மாட்டார். அவர்களுடைய தொழில் சமுதாயத்துக்கு இன்றியமையாதது. இதை உணர்த்தும் வகையான்,

''எத்தொழில் செய்தாலும் இழிவில்லை'' என்ற நாயகமவர்களின் போதனையைக் கவிஞர் எடுத்துக் காட்டுகிறார். தியாகத்தைப் பற்றி பலபட பேசும் காலம் இது. ஒவ்வொருவரும் தங்களுடைய வாழ்க்கையில் தங்களுடைய அந்தஸ்துக்கும் அமைவுக்கும் ஏற்ப ஏதோ ஒரு துறையில் ஏதோ ஓரளவில் தியாகம் செய்யத்தான் வேண்டியிருக்கிறது. மனிதன் குடும்பத்தில் ஒருவனாக, நாட்டில் ஒருவனாக, உலகில் ஒருவனாக வாழுகின்ற வரையில் இது தவிர்க்கமுடியாதது. ஆனால், இந்தத் தியாகத்தின் நோக்கம் பெரும்பாலும் உன்னத லக்ஷியத்திலிருந்து பிறந்ததாக இருக்காது. உதாரணமாக, ஒரு தாய் தன்னுடைய குழந்தைகள் நன்றாக வாழ்ந்து வளம்பெற வேண்டுமென்பதற்காகத் தன்னுடைய தேவைகளையும் வசதிகளையும் தியாகம் செய்யலாம். இது பெற்ற பாசத்தினால் பிறப்பது. அதுபோலவே, ஒரு குடும்பத் தலைவன் குடும்பத்திலே வாழும் பிறரிடையே சுகமும் அமைதியும் திருப்தியும் நிலவ வேண்டுமென்பதற்காகத் தன்னுடைய தேவைகளையும் வசதிகளையும் தியாகம் செய்யலாம். இது, பொறுப்புணர்ச்சியிலிருந்து பிறக்கும் தியாகம். ஒருவன் தான் பிறந்த நாட்டின் சுதந்திரத்தைப் பாதுகாக்க தன் உயிரைத் தியாகம் செய்யலாம். இது தேசப் பற்றிலிருந்து பிறக்கும் தியாகம். ஆனால், இவை ஒவ்வொன்றும் ஒரு குறிப்பிட்ட கோணத்திலிருந்து பாராட்டத்தக்கது. இவை எல்லாவற்றையும் விடச் சிறந்த தியாகம் எதுவென்றால், தாய் — மக்கள் என்ற பாசம் இன்றி, குடும்பத்தலைவன்—அதில் வாழும் பிறர் என்ற பந்தமின்றி, தேசப்பற்று என்ற உணர்வு இன்றி, அநீதி எங்கு காணப்பட்டாலும், அதை எதிர்த்துப் போரிடுவதில் உயிர் நீக்கும் தியாகமே தலை சிறந்தது என்று நாயகமவர்கள் போதித்ததை,

**''நேர்மைக்காய்ச் சாவதிலும் தியாகம் வேறில்லை''**

என்று கவிஞர் எடுத்துக்காட்டுகிறார்.

அகில உலகமும் ஏற்றுக்கொண்டு பாராட்டும் இஸ்லாத்தின் மிகப் பெரிய போதனை, மனிதரிடையே உயர்வு தாழ்வு கற்பிக்காமை. எந்நாட்டவனும், எந்நிறத்தவனும், எம்மொழி பேசுபவனும், எத்துறை வாழ்பவனும் ஏகத்துவத்தை ஏற்றுக் கொண்டு

இஸ்லாத்தை ஒப்புக்கொண்ட மாத்திரத்தில் அந்த ஏக இறைவனுடைய குடும்பத்தில் ஒருவனுக ஆகிவிடுகிருன். நாகரிகமும் விஞ்ஞான உணர்வும், நம்பக்கூடத் தயங்கும் அளவுக்கு வளர்ந்திருக்கிற இன்றும்கூட சாதிக்க முடியாத இந்தப் பெருத்த சாதனையை முரட்டுத்தனம் நிறைந்த அரபிகளிடையே 'ஆயிரத்து நானூறு ஆண்டுகளுக்கு முன் அந்தப் பாலைவனத்திலே பிறந்த நாயகமவர்கள் செய்து முடித்ததை யாராலும் வியக்காமல் இருக்க முடியாது. இதனைத்தான் கவிஞரவர்கள்,

**மந்திரத்தால் மாயவித்தை செய்குவது போன்று**
**மனிதரிலே தாழ்வுயர்வே யில்லையெனச் செய்தீர்**

**சிந்தித்தால் இது நடந்தகாலத்தை வியப்பால்**
**சிரம்சுற்றச் செய்திடுதே''**

என்று அழகாகச் சொல்லுகிருர்கள்.

நாயகமவர்களின் இத்தகைய அரிய போதனைகள் பலவற்றை அழகிய எளிய தமிழில் கவிதை வடிவிலே கவி கா மு ஷரீப் அவர்கள் இந்த நூலிலே வடித்துத் தந்திருக்கிருர்கள். கவிதை அமைப்புக்காக மாத்திரம் படிக்காமல் அதில் காணும் கருத்துக்களை மனத்திற் கொண்டு நாயகமவர்களின் சீரிய வாழ்க்கை நெறியின்படி நடக்க ஊக்குவதற்காகப் பிறந்த நூல் இது. இதனை இயற்றிய கவிஞர் அவர்களுக்கும் இதனைப் படிக்கின்ற நல்லவர்களுக்கும் இறையருள் நிறையக் கிட்டுமாக என்று இறைஞ்சுகிறேன்.

சென்னை
29-2-72

**மு. மு. இஸ்மாயீல்.**

செந்தமிழ் இலக்கியச் செம்மல்—நூலறி புலவர்,

**உயர் திரு. டாக்டர் ந. சஞ்சீவி,** எம்.ஏ.,எம்,லிட்.,பிஎச்.டி.;

டிப். மானிடவியல். டிப். அரசியல்—ஆட்சியியல்.

தமிழ்த்துறைத் தலைவர்—பேராசிரியர்.

சென்னை பல்கலைக்கழகம். அவர்கள், வழங்கிய—

# மதிப்புரை

**'தமிழ் முழக்கம்'** கவி. கா. மு. **ஷெரீப்** அவர்களை யான் கடந்த கால் நூற்றாண்டுக் காலமாய் அறிவேன். ஆயினும், **'நபியே எங்கள் நாயகமே!'** என்ற தலைப்பில் கவிஞர் பாடியுள்ள **நந்நபி வாழ்த்துப் பாமாலை** என்னும் நன்னூலால் அவர்களை யான் இந்நாள் அறிவதுபோல் —போற்றுவது போல்—எந்நாளும் அவரை அறிந்தது மில்லை; போற்றியதுமில்லை.

**நந்நபி வாழ்த்துப் பாமாலையின்** (இரட்டைத் தலைப் பில்லாமல் இவ்வொரு தலைப்பே இருக்கலாம்) முதற் பதிப்பு மூன்று இஸ்லாமியப் பெருமக்களிடம் அணிந் துரையும், ஆய்ந்துரையும், பாராட்டுரையும் பெற்றுள் ளது. இந்த இரண்டாம் பதிப்பிற்கு எளியேன் மதிப் புரை தருவது ஓர் இந்து — இந்தியனுக்கு, ஒரு தமிழ் — சைவ சித்தாந்திக்குக் கிடைக்கும் தனிப் பெருமையென்றே கருதி, தலைவணங்கி **கவிக்கு** வாழ்த்துச் சொல்கிறேன்.

கவி கா. மு. **ஷெரீப் நந்நபி வாழ்த்துப் பாமாலை,** ஒரு நூறு (100) ரோசா மலர்களால் தொடுக்கப் பெற் றது. முன்னே பன்னிரண்டு (12) பாக்களும் பின்னே இரு பாடல்களும் மருக்கொழுந்தாய் மணங் கமழ்

கின்றன. மொத்தத்தில் இந்த நூற்றுப் பதினுன்கு (114) பாடல்களும் திருவாசக உடலில் திருக்குறள் உயிர் எடுத்த புதியதொரு பிறப்போ என்ற எண்ணத்தையே ஏற்படுத்துகின்றன. அந்த அளவிற்கு நீதிகள் சேதிகள் போல் உருக்கச் சுவையுடன் உருண்டு புரண்டு வரு கின்றன.

இந்நூல் முழுவதிலும் உள்ள பாடல்களில் எந்த ஒன்றிலும் ஒரு சிறு இடறலும் இல்லை. அந்த அளவிற்கு 'மன்னு' புகழ்த் தமிழ்க் கவிதை' இழுமெனும் ஒலி யோடு இழுத்துச் செல்கிறது—ஆம், பாடியவரையும் படிப்பவரையும் இதன் காரணமாக ஒரு குட்டித் திருக் குறள் போல் — ஒரு குட்டித் திருவாசகம் போல் — பயன் தரும் பண்பு படைத்த நந்நபி வாழ்த்துப் பாமாலை ஒவ்வொரு இந்துவும் கூட பாராயணமாய் ஓதத்தக்க நூலாகிறது எனலாம்.

'நந்நபி வாழ்த்துப் பாமாலை'யில் உள்ள ஒவ்வொரு பாடலும் ஓதி ஓதி உணர்ந்து உணர்ந்து உருகி உருகி செயற்படத் தக்கது. இக்கால இலக்கியம் எக்கால இலக்கியத்திற்கும் தந்த அருட் கொடையாய்—அருந் தமிழ்க் கொடையாய் விளங்கும் இந்நூலை வழங்கிய கவி கா மு ஷெரீப் பல்லாண்டு பல்லாண்டு வாழ்க! வாழ்க! இந்நூல்போல் நன்னூல்கள் பன்னூல்களாய் வெளிவர அல்லாவின் அருட்பிச்சையை நாளும் வேண்டுகிறேன். இஸ்லாமியத் தமிழிலக்கியம் இனிது வளர்க! சமயந்தொறும் நின்ற தையலாம் தமிழ்த் தாய் புகழ் மேலும் ஓங்குக! நற்றமிழும் நபிகள் நாயக மும் வெல்க!

**ந. சஞ்சீவி**

*18-6-73*

*அன்வாரு மிஷ்காத்தில் மஸாபீஹ் (ஹதீத்) நூலின் தமிழாக்க ஆசிரியரும் ''நூறுல்ஹக்'' மாத இதழ் ஆசிரியரும் கவிஞரும் மார்க்க அறிஞரும் பன்னூல் களின்ஆசிரியரும் மதுரை மரைக்காயர் எனச் சிறப் பித்துக் கூறப்படும் மர்ஹூம் ம. கா. மு. காதிர் முஹ்யித்தீன் மரைக்காயர் அவர்கள் வழங்கிய—*

## சாற்றுக் கவி

**எல்லா வுலகோர்க்கும் ஈற்றுப் பெருங்குருவாய்ச்**
**சொல்லோ டிறைமறைவன் சொல்லடக்கி—கல்லார்**
**செவிக்குமெளி தாய்நீதிச் செய்யுடந்தான் வாழ்த்திக்**
**கவிக்குரிசில் காமுஷரீப் காண்.**

*மதுரை*
*9—7—73* } **—ம. கா. மு. காதிர் முஹ்யித்தீன் மரைக்காயர்**

சைவ சமய அறவுரையாளர் திருவாவடுதுறை ஆதீன வித்வான்
உயர்திரு. **புலவர் கீரன்** அவர்களின்

# அணிந்துரை

நபிகள் நாயகம் எல்லா மதத்தவரும் பின்பற்றக் கூடிய நீதிகளை உபதேசித்த அருளாளர்: **நாயகத்தின் போதனையால் செழித்தது, இஸ்லாம் மதம் மட்டுமன்று ஏனைய மதங்களும் ஆகும்.** இதனைப் பிறமதங்களின் அறவுரைகளை ஊடுருவி நோக்கினுல் தெரிந்துகொள்ளலாம்.

நபிகள் நாயகத்தின் வரலாற்றைக் காவியரூபமாகத் தமிழ் மொழியில் கற்பதற்கு அமைந்த நூல், உமறுப் புலவரின் சீருப்புராணம்.

அவர்தம் அறவுரைகளைத் தெளிந்த கவிதை வடிவில் தரும் நூல், கவி கா மு ஷெரீப் அவர்கள் இயற்றியுள்ள ''நபியே! எங்கள் நாயகமே!'' என்ற கவிதை நூல்.

இந்நூல் தெய்வமணம் கமழுகிறது. அரசியலிலும், சமுதாய சீர்திருத்தத்திலும் ஈடுபட்ட ஆசிரியர் பல்வேறு நூல்களை இதுவரை வெளியிட்டிருந்தாலும், இந்த நூலிலேயே அவரது கவித்துவத்தின் தெய்வீகத் தன்மையைக் காண்கிறேன். அவருடைய எல்லா நூல்களையும் எழுத்தெண்ணிப் படித்தவன் என்ற உரிமையிலேயே இதனை நான் எழுதுகிறேன்.

ஒரு கவிஞன், தன் உள்ளத்திலே அரும்பும் கருத்துகளைக் கவிதை வடிவில் வெளியிடுவது எளிது. ஆனுல், ஒரு பெரும் அருளாளரின் கருத்துக்களை அதன் தன்மை கெடாமலும், கவியுரு சிதையாமலும் கவிதை உருவில் வெளியிடுவது அரிதினும் அரிது. இம் முயற்சியில் துணிகரமாக ஈடுபட்டு மகத்தான வெற்றிபெற்று நிற்கிறுர் கவி கா. மு. ஷெரீப்.

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் அறவுரைகளைப் பின்பற்ற நினைப்போருக்

கும், பிறருக்கு எடுத்துக் கூற நினைப்போருக்கும், எளிய இனிய முறையில் அமைந்துள்ள ஒரே நூல், கவிஞரின் ''நபியே! எங்கள் நாயகமே''!. அரிதின் முயன்றாலும், இஸ்லாத்தின் கருத்துகளை அறிய முடியவில்லையே என ஏங்கும் பிற மதத்தவருக்கு, இஸ்லாம் குறித்தும் நபிகள் அறங்'குறித்தும் மிக எளிதில் இந்நூல் உணர்த்தி விடுகிறது.

இறை, மறை, மக்கா, கஃபா, அப்துல் முத்தலிப், அப்துல்லா, ஆமினா வாழ்த்துகளுடன் நூல் கம்பீரமாகத் தொடங்குகிறது. பின்னர் தொடங்கும் நந்நபி வாழ்த்துப் பாமாலையில் நாயகத்தின் அரிய செயல்களைத் துதித்து வழங்குகிறார் ஆசிரியர்.

''ஆட்சிக்கும் மதத்திற்கும் தலைவராய் இருந்தும்
அஹ்மதரே! நீர் சிறிய குடிசையிலே வாழ்ந்தீர்!
காட்சிதனக் கெளியவராய்க் காண்போர்குறை
தீர்க்கும்
கருணைமிகு வள்ளலுமாய் வாழ்ந்திட்டீர்! கெட்ட
காழ்சிந்தைக் காரருக்கும் எதிரிக்கும் கூட
கடுகளவும் தீமைஏதும் நீர்செய்த தில்லை

மாட்சிமிகு சாந்திமதம் தந்திட்ட இறுதி
மாநபியே! முஹம்மதரே! வாழியரோ! வாழி!''

என்ற திருப்பாட்டில் நாயகத்தை வரைபடம் பிடித்துக் காட்டும் பாங்கைத் தமிழுலகம் என்றென்றும் பாராட்டும்.

''இஸ்லாம் என்றால் என்ன?''—என்று யாராவது வினவினால், இரத்தினச் சுருக்கமாக விடையளிக்கிறது இந்நூல். ''பசித்தோருக்கு உணவும், இன்சொல்லும் வழங்கல்,'' ''துன்பத்தைத் தாங்கிடுதல், சுகம் குறைத்துக் கொள்ளல், துயருற்றோருக்கு உதவிடுதல், சுற்றத்தார் பேணல், இன்பத்தை வெறுத்திடுதல், இல்லார்க்கு வழங்கல், இதயத்தின் கருணையினால் எளியோரைக் காத்தல், அன்பு வடிவாகிடுதல், அண்டினோருக்கு உதவல் ஆன இவை இஸ்லாம்'' என்று பசுமரத்து ஆணிபோல் கவிதைக் கம்பீரத்துடன் நூல் விடை தருகிறது.

ஒருநாள் சகாபாக்கள் நபிகளிடம் சென்று, "நாயகமே! மனிதரில் சிறந்தவன் எவன்?" என்ற சிக்கலான வினவை எழுப்பினர். நாயகமோ, அடுத்த வீட்டுக்காரன் பாராட்டும்படி வாழ்பவனே மனிதன் என்று விடையிறுத்தார். இக் கருத்தை ஆசிரியர் அழகுத் தமிழில் தருகிறார்.

"மானிடரில் நல்லவர்கள் யாரென்றே ஓர் நாள்
வள்ளலே! நும் மிடத்தினிலே சகாபாக்கள் கேட்க
'தானிருக்கும் வீட்டருகேவாழ்ந்திருக்கும் மாந்தர்
தக்கவர்என்று உரைக்கும்படி வாழ்பவரே' என்றீர்!"

இவ்வளவு அழகாக நாயகத்தின் கருத்தைக் கவிஞரைத் தவிர யாரும் சொல்ல முடியாது. தக்கார் தகவிலர் என்பது அவர் அவர் எச்சத்தாற் காணப்படும் என்ற குறளுக்கு கவிஞரின் இந்த வரிகள் ஒரு வியாக்கியானமாக அமைந்திருக்கிறது.

இஸ்லாத்தின் கொள்கைகள் இன்னின்ன என்பதை விளக்கிய ஆசிரியர், எது எது இஸ்லாம் ஆகாது என்பதைக் கூறுவதன் மூலம், இஸ்லாத்தின் பெருமையை எதிர்மறை முகத்தாலும் விளக்குகிறார்.

"உழைக்காமல் வாழ்ந்திடுதல், உண்ணுவதைத் தனித்துண்ணல், பிழைக்க எண்ணிப் பொய்யுரைத்தல், இஸ்லாம் நெறியாகா," "மானிடரைப் புகழ்ந்திடுதல், மறைவாகப் புறம் பேசல், வீணில் இடர் செய்திடுதல், மிகுத்துணவு தானுண்ணல், தானடங்கா மனப்போக்கும், தனை பிறருக்கு அடிமையிடல் இஸ்லாம் நெறியாகா" என்பன கவிஞரின் சில தேன் துளிகள்.

**பெண்மையின் முன்னேற்றத்திற்குப் பெருஞ்சிறப்புத் தந்தவர் நபிகள் நாயகம் என்பதை அனைவரும் அறிவர். அவர் தம் கருத்துகளை எல்லாம் எளிய வடிவில் ஆசிரியர் வழங்கியுள்ளார்.**

**இந்துக் குடும்பப் பெண்களும் தெரிந்து கொள்ள வேண்டிய அரிய நீதிகள் பலவற்றை எளிய நடையில் இந்நூலில் கவிஞர் எழுதியுள்ளார். இதன் பொருட்டு ஒவ்வொரு இந்துவின் குடும்பத்திலும் இந்நூல் இருந்தே தீர வேண்டும். உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை.**

பொது வாழ்த்துடன் நூலை முடிக்கின்ற ஆசிரியர், அவையடக்கமாக ''நபிகளின் நல்லுரைகளைத் தெரிவிக்க நானறிவு பெற்றிருக்கவில்லை'' என்று கூறினாலும், இதுவரை நபிகள் குறித்துத் தமிழில் வந்துள்ள நூல்களில், சாதாரண மக்களும் பயின்று பின்பற்றக் கூடிய வகையில் அமைந்துள்ள கவிதை நூல் இது ஒன்றே என்பதில் ஐயமில்லை.

தமிழகத்தின் தலைசிறந்த கவிஞராகிய திரு. கவி காமு ஷெரீப், இத் தகு நூல்கள் பலவற்றை மேலும் வெளியிட்டுச் சமய உலகமும், தமிழுலகமும் பயன் பெறத் தொண்டாற்ற வேண்டும் என்று இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

லால்குடி
16-6-73

அன்புள்ள
**கீரன்**

தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சி மன்றத்து இயக்குநரும், பன் நூல் ஆசிரியாரும், சீறா இலக்கியத் தெளிவுரையாளரு மாகிய உயர்திரு.

**சிலம்பொலி சு. செல்லப்பன்,**

எம். ஏ., பி.டி., பி.எல். அவர்களின்

# துய்ப்புரை

கவிஞர் கா. மு. ஷெரீப் அவர்கள் நபிகள் நாயகத்தின் அருமை பெருமைகளை இனிய எண்சீர் விருத்தப் பாக்களில் இந்நூலில் விளக்கியுள்ளார்கள். நூலின் தொடக்கத்தில் அகிலத்தைப் படைத்தளிக்கும் அல்லாஹ் வாழ்த்தப் படுகிறான். அடுத்து, அவன் நாயகமவர்களுக்கு அருளிய திருமறை போற்றப்படுகிறது. பின்னர், நாயகம் பிறந்த நன்னகராம் மக்காவும், அங்குள்ள இறை இல்லமாம். கஃபாவும் முறையே பெருமைப்படுத்தப்படுகின்றன. அடுத்து, நபிகள் நாயகத்தின் முன்னோரைப் போற்றும் வகையில் அவருடைய பாட்டனார் அப்துல் முத்தலிப், தந்தை அப்துல்லா, தாய் ஆமினா ஆகியோரின் அருங் குணங்கள் உரைக்கப்படுகின்றன. அவர்களையடுத்து, பெருமானாருடன் இணைந்து வாழ்ந்து அவர் செயல்களுக் கெல்லாம் ஊக்கமூட்டி வந்த அவரது வாழ்க்கைத் துணைவியராம் கதீஜாப் பிராட்டியாரும் ஆயிஷா நாச்சி யாரும் வாழ்த்தப்படுகின்றனர். இவ்வாறாக இறைவனை யும் திருமறையையும் வாழ்த்தி, காப்பிய நாயகரின் முன்னோரை மொழிந்து, இணைந்து வாழ்ந்தவர்களைச் சுட்டி நூலைத் தொடங்கியிருக்கும் பாங்கு மிகவும் சிறப் பாக உள்ளது.

"வல்லவனின் தூதர், வையம் காத்த வள்ளல், வெள்ளை மன வேந்து, ஞானிகளின் ஞானி, அண்டர் புகழ் நாயகம், சாந்திமதம் தந்தவர், ஏழைகளின் தோழர், விண்புகழ வாழ்ந்தவர், நடுநின்ற நெஞ்சினர்" ஆகிய

நபிகள் நாயகத்தின் உள்ளத்தையும் செயல்களையும் ஒருங்கே வெளிப்படுத்துகிறது இந்நூல்.

''தன்னலம் மறந்து பிறர் நலத்துக்காகப் பாடு பட்டவர்; துயரிடை அகப்பட்டும் தூயவழி நின்றவர்; மக்கள் சுகப்படத் தான் அடிபட்டவர்; கல்லிலும் செம்பிலும் இறைவன் இல்லையெனக் கழறியவர்; கல்லாமை தொலைய உழைத்தவர்; ஊராண்டதோடு மக்கள் உள்ளமெலாம் ஆண்டவர்: தொண்டரினும் தொண்டராய்த் தொண்டு செய்தவர்; இசுலாம் நிலைபெறத் தண்டெடுத்துத் தளபதியும் ஆனவர்; பேச்செல்லாம் செயலாக்கிப் பெருமை கொண்டவர்'' என்பன போன்ற சொல் வரைவுகளால் பெருமானாரின் பெருமைமிகு ஓவியத்தைப் படிப்போர் மனத்திலே வரைவதில் கவிஞர் முழு வெற்றி பெற்றுள்ளார்.

''புவிபோற்றும் முஹம்மதரின்
தொண்டுகளில் துளியைப்
புகன்றுள்ளேன்; அவர் செய்த (து)
அனைத்தையுமே எடுத்து
நவிலுதற்கு நானறிவு
பெற்றிருக்க வில்லை''

எனத் தன்னடக்கத்தோடு கவிஞர் கூறியிருந்தாலும், அவர் பெருமானாரின் அரும்பெரும் செயல்களையும் சிந்தனைகளையும் நிரல்பட அழகு தமிழில் உள்ளம் கொள்ளை கொள்ளத்தக்க வகையிலே எடுத்துரைப்பதை நூலைப் படிப்போர் நன்குணர முடியும். பெருமானார் மொழிகளைக் கவிஞர் தம் சொல்லால் சொல்வதை இங்கே காணலாம்; பெருமானாரின் பொன்மொழிகள்: ''பசித்தோர்க்கு உணவும் இன்சொலும் வழங்குவதே இசுலாம். உழைக்காமல் வாழுவதும் உண்ணும் போது தனித்து உண்பதும், பிழைக்க எண்ணிப் பொய்யுரைத்தலும், பித்தலாட்டம் கொலை களவு செய்தலும் இசுலாம் ஆகாது. பலன் கருதாது தொண்டு செய்வதே

தர்மம். செல்வம் சேர்த்து வைப்பதற்காக அல்ல, நொந்து கெட்டவர்க்கு உதவுவதற்கேயாம். நல்லதைச் செய்யவும் அல்லதை ஒடுக்கவும் உறுதி கொண்டால் ஆண்டவன் அருள்வான். அழகிற்காக ஆடை உடுத்தக் கூடாது. தொழிலுக்காகத் தொழுகையை மறக்கக் கூடாது. வணிகத்தில் கொள்ளை இலாபம் கூடாது. எளியாரை எள்ளி நகையாடக் கூடாது. இறைவனின் ஏவல் எது, விலக்கு எது என்று விளங்கி நடப்பவனே மேலோன். தனக்குக் கிடைப்பது பிறர்க்குக் கிடைக்க வேண்டு மென்பதே சிறப்பு. தொழிலாளி மனம் மகிழக் கூலி தர வேண்டியது முதலாளியின் கடமை. மனைவியை அடிமை என்று எண்ணுதல் கூடாது. சொர்க்கம் தாயார் திருவடியில் உள்ளது. நற்செயல்கள் அனைத்திலும் தாய் தந்தையர்க்கு ஆற்றும் நற்பணி உயர்ந்தது. ஆணும் பெண்ணும் சமம். அன்பில்லா நெஞ்சமுள்ள மானிடர்பால் இறைவன் அன்பு கொள்ளான்...என நூல் முழுதும் கூறி யுள்ள பெருமானாரின் மொழிகள் கற்போர் உள்ளங் களை நன்னெறிப்படுத்துவனவாம்.

பெருமானாரின் எளிமையையும் தூய வாழ்வையும் பற்றிக் கவிஞர் கூறியுள்ளவை உள்ளத்தை உருக்குகின்றன. இவை உயர்ந்த பதவியில் இருப்பவர்கள்; தம்உள்ளத்தே என்றென்றும் நிறுத்திப் பின்பற்ற வேண்டிய கருத்துக் களுமாம். ஆட்சிக்குத் தலைவராக இருந்தும் அண்ணலார் ஈச்சோலைக் குடிசையிலே வாழ்ந்து வந்தார். அவர் இறக்கும்போது விட்டுச் சென்ற சொத்து ஈச்சம்பாய், பிய்ந்த தோல் தலையணை, ஜுப்பா, உடுத்தும் ஆடை, தேய்ந்த பாதக் குறடு. நாட்டின் தலைவர் தனக்கெனச் சேர்த்து வைத்துக் கொண்ட சொத்துக்கள் இவையே!

இசுலாத்தின் நெறிமுறைகளையும், நம்பிக்கைகளையும் எளிதில் அறிந்து கொள்ள இந்நூற் பாடல்கள் துணை செய்கின்றன. இசுலாத்தின் ஐந்து கடமைகளை ஒரு பாடலில் (16) கவிஞர் விளக்குகிறார் (i) இறைவனை

நம்பி முகம்மதுவை அவனுடைய தூதரெனக் கொள்ளல். (ii) ஐவேளை தொழுதல் (iii) சக்காத் அளித்தல் (iv) நோன்பிருத்தல் (v) பொருளிருந்தால் புனித ஹஜ்ஜைச் செய்தல் எனும் இவ்வைந்துமே இசுலாத்தின் ஐம்பெரும் கடமைகளாம்.

ஈமான் என்றால் என்ன? அல்லாஹ்வையும், அவனுடைய திருமறையையும், அவனுடைய வானவர் களையும் அவனுடைய தூதர்களாம் நபிமார்களையும், இறுதித் தீர்வு நாளையும், சொர்க்க நரகத்தையும் நம்புவதே ஈமான் என்பதைக் கவிஞர் ஒரு பாடலில் (17) அழகுற விளக்கியுள்ளார்!

இசுலாம் நெறிகள் எவையெவை என்பதை விளக்குவது போலவே இசுலாம் நெறிகள் ஆகாதவை எவையெவை என்பதையும் நான்கு பாடல்களில் (36, 37, 38, 39) நயமுறச் சுட்டிச் செல்கிறார். "உழைக்காமல் வாழ்ந் திடுதல்; உண்ணுவதை தனித்துண்ணல்; பிழைக்க எண்ணிப் பொய்யுரைத்தல்; பித்தலாட்டம் கொலை களவு; கழைக் கூத்தாடல், காண்டல்; மானிடரைப் புகழ்ந்திடுதல்; மறைவாகப் புறம் பேசல்; வீணில் இடர் செய்திடுதல்; மிகுத்துணவு தானுண்ணல்; தான் அடங்கா மனப்போக்கு; தனைப் பிறர்க்கு அடிமையிடல்; படாடோப வாழ்க்கை; பசித்தோரை விட்டுண்ணல்; அடாவடி செய்தல்; அக்கிரமம் புரிந்திடுதல்; கொடாது பணம் சேர்த்தல்; குடித்தல் நடித்தல்; வட்டி வாங்குதல்; வன்மை மிகு பகைக் குணம் கொள்ளுதல்; வெட்டிப் பேச்சுப் பேசுதல்; வினைச் சுத்தம் இல்லாமை; கட்டிப் பணத்தைக் காத்தல்; கடவுளை நம்பாமை ஆகியவை இசுலாம் நெறியாகா!

எவை யெவை தீயவை என்பதை இரண்டு பாடல் களிலும் (40, 41) எவையெவை நல்லவை என்பதை இரண்டு பாடல்களிலும் (42, 43) குறிப்பிட்டுள்ளார்.

நற்குணம் கொள்ளாமையே நரகம் என்பதை ஒரு பாடல் சுட்டுகிறது. (23)

இசுலாத்திலேயே மிகச் சிறந்த ஒன்று மனிதர்களிலே உயர்வு தாழ்வு இல்லை என்பதாம்! விஞ்ஞானம் வெகு முன்னேற்றமடைந்துள்ள இந்த நாளிலேயே செய்ய முடியாததை, அறம் பாழ்த்துக் கிடந்த அந்த நாளில் முகம்மது நபி அவர்களால் செய்ய முடிந்தது என்பது நினைத்தாலே வியப்பளிப்பதாகும்!

எந்திரத்தால் சந்திரனைத்
தொட்டுவிட்ட இன்றும்
இழிவாக நீக்ரோவை
எண்ணுகிறான் மனிதன்;
மந்திரத்தால் மாயவித்தை
செய்குவது போன்று
மனிதரிலே தாழ்வுயர்வே
இல்லையெனச் செய்தீர்!
சிந்தித்தால் இதுநடந்த
காலத்தை வியப்பால்
சிரம்சுற்றச் செய்திடுதே
ஆண்டவனின் தூதே!

எனக் கவிஞர் கூறுவது உண்மை தானே!

நபிகள் நாயகத்தினுடைய முழு வாழ்வையும் ஒரே பாடலில் அடக்கிக் காட்டுவது நயம் நிறைந்ததாயுள்ளது.

பிறக்கும்முன் தந்தையரைத்
தானிழந்து, புவியில்
பிறந்தசில ஆண்டிற்குள்
தாயாரை இழந்து
சிறப்பான கல்வியின்றி
மாடாடு மேய்த்துச்
சுற்றத்தார் ஆதரவில்
அனாதையென வளர்ந்து
முறைப்படிக்குத் தொழில்செய்து
திருமணமும் முடித்து

மும்மூன்று மகவு பெற்று
ஞானவழி சென்று
பெறற்கரிய நபிப்பட்டம்
பெற்றிட்ட இறுதிப்
பெரு நபியே!......

இவரே நபி என்பதை இவ்வொரு பாடலிலேயே உணர்த்தி விடும் கவிஞரின் திறம் போற்றுதற்குரியது.

இந்நூல் இசுலாத்தின் பிழிவை இனிய தமிழில் தருகிறது. எளிய சொற்கள், தங்குதடையற்ற நடையோட்டம், தெளிந்த சிந்தனை, அரிய செய்தி விளக்கம் ஆகியவற்றின் தொகுப்பாய் இந்நூல் இலங்குகிறது. 'இதுதான் இசுலாம்' எனப் புரிந்து கொள்ள இந்நூல் பெரிதும் பயன்படும். கவிஞரின் கனிந்த பட்டறிவையும், இசுலாமிய நெறிகளில் அவர் ஊறித் திளைத்துள்ளதையும் இந்நூல் நன்கு புலப்படுத்துகின்றது. ''நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து'' படித்தற்குரியதும் நெஞ்சில் பதித்தற்குரியதுமான இச்செந்நூலை ஆக்கித் தந்துள்ள கவிஞர் பெருமானை வாழ்த்துவோம்! போற்றுவோம்!

அன்பன்,

**சு. செல்லப்பன்**

# இந்நூலில் இடம் பெற்றுள்ள அரபிச் சொற்களின் பொருள் விளக்கம்

| | | |
|---|---|---|
| 1. | அல்லாஹ் | ... இறைவன். |
| 2. | அஹ்மது | ... புகழுக்குரியவர் |
| 3. | அஷ்ஹது அன்லா யிலாஹ இல்லல்லாஹ் | ... இறைவன் ஒருவனே என்று சாட்சி கூறுகிறேன். |
| 4. | அஸ்ஸலாமுஅலைக்கும் | ... உங்களுக்குச் சாந்தி உண்டாகுக. |
| 5. | ஆலிம் | ... மார்க்க அறிஞர். |
| 6. | இஸ்லாம் | ... சாந்திநெறி - சன்மார்க்கம். |
| 7. | ஈமான் | ... உளம் ஒப்பல். |
| 8. | உலமா | ... மார்க்க அறிஞர்கள். |
| 9. | கஃபா [கஃபத்துல்லா] | ... மக்கா நகரிலுள்ள இறையில்லம் |
| 10. | கலீபா | ... இஸ்லாமியக் குடியரசுத் தலைவர். |
| 11. | கலிமா | ... இஸ்லாமிய மூல மந்திரம். |
| 12. | குர்ஆன் | ... இஸ்லாமியத் திருமறை. |
| 13. | ஸகபா [சஹாபா] | ... நபிகள் நாதரின் தோழர். |

14. ஸூபி ... ஆத்மஞானி.

15. தஸ்லீம் ... பணிவன்புடன் சலாமுரைத்தல்.

16. தீன் ... இறைநெறிச் செம்மை.

17. புர்க்கான் ... குர்ஆனின் வேறு பெயர்.

18. மலக்குகள் ... வானவர்கள்.

19. மஸ்தான் ... இறை சிந்தனை வெறியினர்.

20. முர்சலீன் ... வேதம் அருளப்பெற்ற இறை தூதர்கள்.

21. முஸ்லீம் [முஸ்லிம்] ... இறை நெறி பிறழா வாழ்வினன்.

22. ரஸூல் ... வேத வெளிப்பாடு. பெற்ற இறை தூதர்.

23. மூமீன் ... நன் நம்பிக்கையாளர்.

24. வஹீ ... வேத வெளிப்பாடு.

25. ஷைக் [ஷெய்கு] ... பெரியவர் - தலைவர் - ஆத்மீகத் துறையில் வழிகாட்டி.

26. ஜக்காத் ... ஆண்டுக்கொருமுறை ஒவ்வொருவரும் கட்டாயம் செலுத்த வேண்டிய அறக் கொடை - நூற்றிற்கு இரண்டரை சத விகிதம்.

27. ஹஜ் ... மக்கா நகருக்கு, குறிப்பிட்ட காலத்தில் செய்யும் புனித யாத்திரை.

## யார் இவர்கள்?

| | |
|---|---|
| அப்துல் முத்தலிப் ... | முஹம்மது நபி (சல்) அவர்களின் பாட்டனார். |
| அப்துல்லா ... | ,, தந்தையார். |
| ஆமீனு ... | ,, தாயார். |
| கதீஜா ... | ,, முதல் மனைவியார் |
| ஆயிஷா ... | ,, இரண்டாம் மனைவியார். |
| பாத்திமா ... | ,, கடைசி மகளார். |

சித்தீக்—அபூபக்கர் சித்தீக் (ரலி)—நபிகள் நாயகம் அவர்களின் பிரதமத் தோழர்—ஆயிஷா பிராட்டியாரின் தந்தையார் — முதற்கலீபா.

| | |
|---|---|
| கத்தாப்—உமருப்னுல் கத்தாப் (ரலி) ... | நபிகள் நாயகம் அவர்களின் தோழர்-மாமனுர்-ஹப்ஸா நாச்சியாரின் தந்தையார்-இரண்டாம் கலீபா. |
| உதுமான் (ரலி) ... | நபிகள் நாயகம் அவர்களின் மருகர் - தோழர்- மூன்ருவது கலீபா. |
| அலியார்—அலீ (ரலி)... | நபிகள் நாயகம் அவர்களின் பெரிய தந்தையாரின் மகன் - முதல் சீடர் - மருகர் — நான்காவது கலீபா. |

# பாட்டுப் பட்டியல்


| தலைப்பு | எண் |
|---|---|
| அஞ்சுவது | ... 52 |
| அயல் வீட்டார் | ... 44 |
| அருளலின்றி | ... 97 |
| அல்லா என | ... 7 |
| அல்லேபோல் | ... 8 |
| அழகிளமை | ... 74 |
| அழகிற்காய் | ... 22 |
| அறஞ்செய் | ... 28 |
| அன்பில்லா | ... 79 |
| ஆடைகளால் | ... 30 |
| ஆடையின்றி | ... 88 |
| ஆட்சிக்கும் | ... 11 |
| ஆபாசம் | ... 89 |
| இல்லார்க்காய் | ... 9 |
| இறந்தோரின் | ... 50 |
| இறப்புலகை | ... 61 |
| இறையவனின் | ... 77 |
| இறை வணக்க | ... 86 |
| இறைவனுக்காய் | ... 41 |
| ஈச்சோலை | ... 59 |
| உண்ணுதற்கு | ... 58 |
| உண்மையான | ... 47 |
| உருவமிலா | ... 16 |
| உழைக்காமல் | ... 36 |
| ஊராண்டீர் | ... 13 |
| ஊர் நடுவே | ... 100 |
| எண்ணத்தில் | ... 29 |
| எதிரிகளின் | ... 81 |
| எத்தொழிலை | ... 55 |
| எப்பாடு | ... 42 |
| எல்லாரும் | ... 6 |
| எல்லையிலா | ... 4 |
| ஏழை என | ... 15 |
| ஒழுக்கமுடன் | ... 76 |
| கள்ளுண்பான் | ... 60 |
| கன்று பல | ... 56 |
| கொடுநரகாய் | ... 46 |
| கொள்கைதனை | ... 12 |
| கொள்ளையிட்ட | ... 83 |
| கொள்ளைலாபம் | ... 32 |
| செய்கின்ற | ... 69 |
| செய்பிழைக்கு | ... 63 |
| செல்வந்தனை | ... 20 |
| சேர்ந்துவாழ | ... 64 |
| சொர்க்கமெங்கே | ... 71 |
| சொல்புதிது | ... 82 |
| சொல்லுக்கும் | ... 3 |
| தலைபோவ தாயினுமே | ... 40 |
| தனக்காக | ... 94 |
| தனக்கின்னல் | ... 80 |
| தனக்குப்பால் | ... 70 |
| தனக்கென்று | ... 91 |

தனக்கொன்றை ... 65
தனக்கொன்றும் ... 48
தனதுழைப்பால் ... 92
தனியவராய் ... 99
தன்னருகில் ... 68
தாயாரை ... 54
தான்பெற்ற ... 66
தான்பெற்றபிள்ளை ... 75
திருப்பித்தரும் ... 31
துன்பத்தை ... 19
தொண்டரினும் ... 14
நண்பர்களே ... 34
நல்லதையே ... 22
நிறத்தாலோ ... 95
பகற்கொள்ளை ... 84
பசித்திருப்போர் ... 23
படாடோப ... 38
பணியாளர் ... 78
பலன்கருதா ... 21
பல்வித ... 5
பிறக்குமுன் ... 98
பிறருக்காய் ... 43
புல்லுக்கும் ... 10
பூகம்பம் ... 73
பெண்கள்நட ... 85
பெருஞ்செலவில் ... 26
பெறும்பேற்றில் ... 67
பெற்றோரை ... 72
பெற்றோர்க்கு ... 49
பொல்லாமை ... 2
மக்களொரு ... 87
மகள்களுக்கு ... 93
மரணமுற்ற ... 45
மறைகளிலே ... 51
மனமறிந்து ... 57
மார்க்கவழி ... 27
மானிடரில் ... 35
மானிடரை ... 37
முழங்காலை ... 24
எந்திரத்தால் ... 96
யாதிஸ்லாம் ... 18
வட்டிப்பண ... 39
வணங்கிடுதல் ... 53
வல்லவனை ... 17
வாளெடுத்தான் ... 62
விக்கிரக ... 90
வறுமையிலே ... 33

# இறை வாழ்த்து

(எண்சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்)

யாவினுக்கும் மேலவனும்
யாங்கணுமுள் ளவனும்

யாவையுமே படைத்தவனும்
யாவினுக்கும் வாழ்வை

மேவியளித் திடுபவனும்
மிகுங்கருணை யாளன்

விரிந்துயர்ந்தே ஆழ்ந்தறிவால்
அளந்திடற்கே அரியோன்

கூவியழைத் திடுமுன்னம்
நாடிநமைக் காக்கும்

கோதில்லா அருளன்பு
தன்னகத்தே கொண்டோன்

நாவினிக்க மேலவர்கள்
நாளுந்துதித் தேத்தும்

நல்லிறையாம் அல்லாஹ்வை
வாழ்த்திடுவாய் நெஞ்சே.

## மறை வாழ்த்து

வான்மறைகள் அனைத்தினுக்கும்
மேலான மறையை

மனிதகுலம் மேன்படவே
வழிகாட்டும் ஒளியை

தேன்மதுரச் சொல்நிறைந்த
தித்திக்கும் அமுதை

திருநிறைந்த பொக்கிஷத்தைச்
செழிப்பளிக்கும் செழிப்பை

ஊன்சுமந்த உடலுறையும்
உயிர்வளர்க்கும் மருந்தை

ஒப்பரிய வானவரும்
உவந்துதினம் போற்றும்

தீன்வளர்க்குஞ் செழும்முகிலை
இறைவனருட் கொடையாம்

திருகுர்ஆன் எனும்'புர்கான்'
தனைவாழ்த்தாய் நெஞ்சே.

# மக்காநகர் வாழ்த்து

ஆதிநகர் பெரியநகர்
அழகியநன் நகரம்

அரபியர்கள் தோற்றுவாய்த்
தலமான நகரம்

சீதநபி இப்ருகீம்
கட்டுவித்த கஃபாத்

தலமுள்ள உலகுபுகழ்ச்
சீர்த்திமிகு நகரம்

ஓதரிய 'வஹி' முதலில்
ஒலித்திட்ட நகரம்

உயர்குர்ஆன் வாசகத்தில்
இடம்பெற்ற நகரம்

வேதநபி முஹம்மதுர்ர
சூலுல்லா பிறந்த

மக்காவெனும் திருநகரை
வாழ்த்திடுவாய் நெஞ்சே.

## க.்.பா வாழ்த்து

ஆதநபி தொழுதயிடம்
இப்ருகீம் மற்றும்

அவர்மைந்தர் இஸ்மாயில்
தொழுதிட்ட பள்ளி

முதறிஞர் மூமீன்கள்
முர்சலீன்க ளுடனே

முஹம்மதுர்ர சூல்நபியும்
அவருடைய வழியார்

போதமுற என்றைக்கும்
ஐவேளைத் தொழுகை

புரிகையிலே மறவாமல்
நினைவில்கொண் டொழுகும்

நாதனருட் தலமான
க.்.பாவைப் போற்றி

நாளெல்லாம் போதமுற
வாழ்த்திடுவாய் நெஞ்சே.

# முத்தலிப் வாழ்த்து

ஏகதெய்வ வணக்கமுடன்
ஏழைக்குத விடுதல்

எழிலார்ந்த ரமலானில்
ஹிராமலையிற் சென்று

வாகுடனே தனித்தியானம்
செய்திடுதல் தீய

மதுவருந்தா வாழ்க்கையினை
மேற்கொள்ளல் சிசுவை

ஈகையின்றிக் கொல்வதினைத்
தடுத்திடுதல் கஃபா

எனுந்தலத்தை ஆடையின்றிச்
சுற்றுவதை நீக்கல்

ஆகயிவை போன்றபல
நற்கருமம் செய்த

அருங்குணத்து முத்தலிபை
வாழ்த்திடுவாய் நெஞ்சே.

## அப்துல்லாஹ் வாழ்த்து

அழகுடைய மாதொருத்தி
வலியவந்தே எணைநீ

அனுபவிப்பாய் வாலிபனே
எனமோகங் கொண்டு

விழியம்பு வீசிநிற்க
விவேகமவட் குரைத்து

மேலான ஆண்கற்பைக்
காத்திடல்செய் திட்ட

தெளிவுடைய முத்தலிபின்
திருக்குமர ரான

சிறப்புடைய அப்துல்லாஹ்
எனும்நாமம் கொண்ட

அளிமனத்து முஹம்மதரின்
தந்தையரை நாளும்

அன்புடனே நீநிணைந்து
வாழ்த்திடுவாய் நெஞ்சே.

## ஆமீனு வாழ்த்து

மூவுலகும் போற்றுகின்ற
முஹம்மதரைத் தமது

மணிவயிற்றில் சுமந்திருந்த
மாண்புநிறை மாதா

மேவுமுயர் வானவரும்
அரம்பையரும் வாழ்த்தும்

மேலான தூய்தான
வாழ்வுடைய அன்னை

நாவுடையார் வாய்மணக்க
நாளும்புகழ்ந் தேத்தும்

நலமுடைய நாமமுள
நற்குணத்துத் தாயார்

ஓவாப்புகழ் ஆமீனுத்
தாயாரை நாளும்

உவந்தேநீ அன்புடனே
வாழ்த்திடுவாய் நெஞ்சே.

# கதீஜா வாழ்த்து

தன்னையும்தன் பொருளினையும்
தன்பணியும் மற்றும்

தான்கற்ற கல்வியுடன்
செல்வாக்கு யாவும்

புன்னகையோ டாண்டவனின்
திருத்தூதர் போதப்

பொன்னடியில் சமர்ப்பித்து
நபிகண்ட இஸ்லாம்

தன்னையுமே தாம்முதலில்
தழுவியிறைத் தூதர்

தமக்குகந்த மனைவியராய்
வாழ்ந்தசீ மாட்டி

நன்னயஞ்சேர் கதீஜாவெனும்
நற்பிராட்டி தம்மை

நாவார நீபுகழ்ந்து
வாழ்த்திடுவாய் நெஞ்சே.

# ஆயிஷா வாழ்த்து

மாதர்குலத் திலகங்களாய்
வையகத்து தித்து

முஹம்மதுர்ர சூல்நபியை
மணந்துநிறை வான

கோதில்லா மாதர்களில்
கதீஜாவிற் கடுத்த

குணவதியாய் தீன்சரிதம்
புகழ்கின்ற நல்ல

போதமிகு அபூபக்கர்
பெண்ணான ஆயிஷாப்

பிராட்டியரை நீநினைந்து
வாழ்த்திடுவாய் நெஞ்சே.

சீதமிகு தீன்செழிக்க
உழைத்திட்ட மாதர்

செழுஞ்சுடரை நீநினைந்து
வாழ்த்திடுவாய் நெஞ்சே.

## பாத்திமா வாழ்த்து

நன்நபியின் மகளாராய்
நானிலத்து தித்து

நற்பெண்டிர் வாழும்நெறி
தனைவாழ்ந்து காட்டி

மன்னுபுகழ் தாம்கொள்உயர்
மற்புலியாம் அலியார்

மனைவியுமாய் ஹசனுசனின்
தாயாகி நல்லோர்

தன்னுடைய நெஞ்சமெலாம்
தமையென்றும் வாழ்த்தும்

தகைசார்ந்த பாத்திம்மா
எனும்நாமம் கொண்ட

உன்னதமாப் பெண்ணரசை
வாழ்த்திடுவாய் நெஞ்சே.

உயர்நபியார் மகளாரை
வாழ்த்திடுவாய் நெஞ்சே.

## கலிபாக்கள்
## சகபாக்கள் வாழ்த்து

சித்தீக்காம் அபூபக்கர்
சீர்த்திமிகும் பாரூக்
சினமறியா உதுமானுர்
அலியாரவர் மைந்தர்
நத்தித்தம் உயிரினையே
தீன்செழிக்கத் தந்தோர்
நல்லஅரும் சகபாக்கள்
பின்வந்த மேலோர்
உத்தமராம் ஆலிம்கள்
உலமாக்கள் ஷைகாய்
உயர்ந்திட்ட சூபிகளாம்
மஸ்தான்கள் போன்ற
அத்தனைநல் லோர்களையும்
வாழ்த்திடுவாய் நெஞ்சே.
அவர்தொண்டை நீநினைந்து
வாழ்த்திடுவாய் நெஞ்சே.

## உலகியல் வாழ்த்து

நன்நபியார் சரிதம்தனை
நானறியக் கல்வி
நயந்தளித்தோர்க் கிறையேநீ
இன்னருள்செய் திடுக

மன்னுபுகழ் தமிழ்க்கவிதை
ஆக்கும்வகை எனக்கே
வகுத்துரைத்தோர்க் கிறையேநீ
வான்புகழைத் தருக

கன்னலுடன் கற்கண்டாய்க்
கவிபாடும் புலவோர்
கருத்துக்கென் கவிவிருந்தாய்
ஆக்கிடுக இறையே

என்னெழுத்தைப் படிப்பவர்கள்
என்னாளும் வாழ்வில்
ஏற்றம்பெற இறையவனைத்
துதித்திடுவாய் நெஞ்சே.

## நபியே எங்கள் நாயகமே !

(நந்நபி வாழ்த்துப் பாமாலை)

வல்லவனின் தூதரென
வந்துவையம் காத்த
வள்ளலேயெம் வள்ளலேநன்
மக்காநகர் தந்த

சொல்லரிய நற்குணமே
அறியாமை யாண்டும்
தொலைந்துயர்வு தோன்றுதற்குத்
தன்னலம் மறந்தே

அல்லுபகல் பாடுபட்டே
அயராது மக்கள்
அனைவரரும் அன்பினையும்
கவர்ந்துநிறை வான

நல்லவரே சாந்திமதம்
தந்தவரே யிறுதி
நபியான முஹம்மதரே
வாழியரோ வாழி.

2

பொல்லாமை தொலைவதற்குப்
போதெல்லாம் உழைத்தீர்

பொய்யர்தரும் தொல்லைகளைப்
பொறுமையுடன் ஏற்றீர்

கல்லாமை இல்லாமை
கட்டோடு தொலையக்

கடும்உழைப்பை மேற்கொண்டீர்
அறியாமை மிக்கோர்

சொல்லாலும் கல்லாலும்
சாடினரே உம்மை

துயரினிடை அகப்பட்டும்
தூயவழி நின்ற

நல்லவரே சாந்திமதம்
தந்தவரே யிறுதி

நபியான முஹம்மதரே
வாழியரோ வாழி.

## 3

சொல்லுக்கும் செயலுக்கும்
தொடர்புவைத்தே மக்கள்

சுகப்படவே அடிபட்டீர்
துயர்ப்பட்டீர் நாளும்

கல்லுக்கும் செம்புக்கும்
கட்டைக்கும் அப்பால்

கருணைமிகும் இறைவனுளான்
என்றிட்டீர் அதனல்

வில்லுக்கும் வாளுக்கும்
இரையாக்க உம்மை

விரும்பினரே அறியாத
மறமாக்கள் புவியில்

நல்லவரே சாந்திமதம்
தந்தவரே யிறுதி

நபியான முஹம்மதரே
வாழியரோ வாழி.

# 4

எல்லையிலாக் கருணைமிகும்
இறையவனின் தூதே

எங்களின்னல் தீர்க்கவந்த
அஹ்மதுர்ர சூலே

தொல்லையிலா நல்வாழ்வு
தோற்றுவிக்க வந்த

சுடர்விளக்கே அறியாமை
தொலைவதற் குழைத்த

முல்லைநிகர் வெள்ளைமன
வேந்தேசம தர்மம்

விளைவிக்க வழிகண்ட
வித்தகரே யார்க்கும்

நல்லவரே சாந்திமதம்
தந்தவரே யிறுதி

நபியான முஹம்மதரே
வாழியரோ வாழி.

# 5

பல்விதம தங்களினுல்
பிளவுபட்டுத் தம்முள்
பகைகொண்டே அறியாமைப்
படுகுழியில் வீழ்ந்து
நல்விதச்செ யல்மறந்து
நாமரூப மற்ற
நல்லிறைக்குப் பற்பலவாம்
உருவமைத்து வீணில்
வல்வழியில் தம்மதமே
மேலென்ற சண்டை
வகைப்பட்டே இடர்ப்பட்ட
மக்களிடை தோன்றி
நல்லதொரு சாந்திமதம்
தந்தவரே யிறுதி
நபியான முஹம்மதரே
வாழியரோ வாழி.

# 6

எல்லாரும் ஓர்குலத்தார்
இஸ்லாமவர் மார்க்கம்

இறைவனுமே ஒன்ருவான்
உருஅவனுக் கில்லே

பொல்லாங்கு பொய்யுரைகள்
பிழைபட்ட வாழ்க்கை

போதையுடன் விபச்சாரம்
போக்கலிறை நெறியாம்

கொல்லாமை சான்ருண்மை
கொண்டொழுகல் வேண்டும்

கொடுக்கலின்றி ஏற்பதனே
விட்டிடுவீர் என்ற

நல்லவரே சாந்திமதம்
தந்தவரே யிறுதி

நபியான முஹம்மதரே
வாழியரோ வாழி.

# 7

அல்லாஹ்என உண்டொருவன்
அவனுக்கிணை யில்லை

அகிலமெலாம் படைத்தளித்துக்
காப்பவனும் அவனே

எல்லாரும் அவனுக்கலால்
பிறர்க்கடிமை யில்லை

எவ்வுயிரும் அவன்முன்னே
சமமாகும் அதனுல்

வல்லமையால் உயிரினத்தைத்
துன்புறுத்தல் ஆகா

மனிதரிலே தாழ்வுயர்வே
இல்லையென்று ரைத்த

நல்லவரே சாந்திமதம்
தந்தவரே யிறுதி

நபியான முஹம்மதரே
வாழியரோ வாழி.

8

அல்லேபோல் தீயசெயல்
அறந்தனையே மூடி

அழித்திடவே மேலவர்கள்
அழுதரற்றி நிற்க

கொல்லேறு போல்மதங்கள்
கொடுமைதனைச் செய்ய

கொடுமைக்கே ஆளாகிப்
பெண்களெலாம் கதற

வல்லோனை மறந்துலகில்
பழிபாவம் செய்து

வாழ்ந்திட்டோர் தனைத்திருத்த
வையமிதில் வந்த

நல்லவரே சாந்திமதம்
தந்தவரே யிறுதி

நபியான முஹம்மதரே
வாழியரோ வாழி.

# 9

இல்லார்க்காய்ப் பொருளீட்டல்
இவ்வுலகந் தன்னில்

என்றென்றும் சுற்றத்தார்
தங்களையா தரித்தல்

வல்லவனின் பெயர்நினைந்தே
நொந்துகெட்டார் தம்மை

வாழவைக்க முயன்றிடுதல்
வாழ்நாளில் வந்த

செல்வமிலா விருந்தினரை
உபசரித்துப் பேணல்

சிறுமையுற்றுக் கலங்குவோரைக்
கைகொடுத்துக் காத்தல்

நல்லவனின் தூதரேநீர்
கைக்கொண்ட நியதி

நாயகமே முஹம்மதரே
வாழியரோ வாழி.

# 10

புல்லுக்கும் உணவளித்துப்
பேணிநிதம் காக்கும்

பெரியவனின் கருணையினுல்
வந்துலக மாந்தர்

தொல்லைகளை நீக்கியின்பச்
சுகவாரி மூழ்கத்

தூயநெறி வகுத்தளித்த
ஞானிகளின் ஞானி

எல்லையிலாப் பேரின்பப்
பெருவாழ்விற் கரசர்

எழுதவொணுக் கீர்த்திதனைச்
சுமந்திருக்குஞ் சீமான்

நல்லவராம் சாந்திமதம்
தந்திட்ட யிறுதி

நபியான முஹம்மதரே
வாழியரோ வாழி.

## 11

ஆட்சிக்கும் மதத்திற்கும்
தலைவராயி ருந்தும்

அஹ்மதரே நீர்சிறிய
குடிசையிலே வாழ்ந்தீர்

காட்சிதனக் கெளியவராய்க்
காண்போர்குறை தீர்க்கும்

கருணைமிகு வள்ளலுமாய்
வாழ்ந்திட்டீர் கெட்ட

காட்சிந்தைக் காரருக்கும்
எதிரிக்கும் கூடக்

கடுகளவும் தீமைஏதும்
நீர்செய்த தில்லை

மாட்சிமிகு சாந்திமதம்
தந்திட்ட யிறுதி

மாநபியே முஹம்மதரே
வாழியரோ வாழி.

## 12

கொள்கைதனைப் பணத்திற்காய்ப்
பதவிக்காய் விட்டுக்

கோணல்வழிச் சுகவாழ்வு
வாழநினைக் காமல்

வெள்கிவரும் கொடுமைதனைத்
திரணமதாய் எண்ணி

வலிந்தேற்று உறுதியுடன்
தமதுவழி நின்ற

உள்கஅரும் மனத்தவரே
உயர்ந்தவனின் தூதே

உலகினரை நல்லவராய்
ஆக்கவந்த மேலோய்

தள்ளரிய சாந்திமதம்
தந்தவரே இறையோன்

தகுநபியே முஹம்மதரே
வாழியரோ வாழி.

# 13

ஊராண்டீர் மக்கள்தம்
உள்ளமெலாம் ஆண்டீர்

உணவினையும் பிறர்க்களித்துப்
பட்டினிகி டந்தீர்

சீராண்ட மனைவிவழி
வந்தபொருள் கோடி

திக்கற்ற பேருக்கவை
கொடுத்துக்க ளித்தீர்

பாராண்ட மன்னரெலாம்
நின்னடிமை என்றார்

பரம்பொருளுக் கெல்லோரும்
அடிமையென முடித்தீர்

காராண்ட உலகினுக்குச்
சாந்திமதம் தன்னைக்

கண்டளித்த முஹம்மதரே
வாழியரோ வாழி.

## 14

தொண்டரினும் தொண்டரெனத்
தொண்டுதினம் செய்தீர்

தொல்லுலகம் வியக்கும்வணம்
இறைநெறியு ரைத்தீர்

தண்டெடுத்த படையதனில்
தளபதியு மானீர்

சண்டையினும் சமாதானம்
தனைமிகஉ கந்தீர்

பண்டிருந்த மேலவரும்
பின்புவந்த பேரும்

பாராட்டும் வகையினிலே
சாந்திமதம் கண்டீர்

அண்டர்புகழ் நாயகமே
மக்காநகர் தந்த

அறிவொளியே முஹம்மதரே
வாழியரோ வாழி.

# 15

ஏழையென வாழ்ந்திடவும்
இறக்கும்போதி லுமே

ஏழ்மையிலே இறந்திடவும்
இருக்கும்வரை என்றும்

ஏழையரின் தோழரென
வாழ்ந்திடவும் இறைவன்

இடுகின்ற யிறுதித்தீர்ப்
பன்றைக்கும் என்றும்

ஏழையரின் உடனிருக்க
அருளும்படி வல்லோன்

இடத்தினிலே வேண்டுதல்செய்
தவனருளைப் பெற்ற

ஏழையரின் துயரறிந்த
மறையவனின் தூதே

ஏற்றமிகும் முஹம்மதரே
வாழியரோ வாழி.

# 16

உருவமிலா ஓரிறைவன்
உண்டென்று நம்பல்

உத்தமராம் முஹம்மதரைத்
தூதரெனக் கொள்ளல்

ஒருநாளைக் கைவேளை
தொழுதிடுதல் ஜக்காத்

துகந்தளித்தல் நோன்பிருத்தல்
வாழ்நாளில் ஹஜ்ஜை

பொருளிருந்தால் நிறைவேற்றல்
ஆகியயிவ் வைந்தும்

பொருந்துகின்ற இஸ்லாத்தின்
கடமையென வல்லோன்

திருநபியாய் வந்தெமக்கு
வகுத்துரைத்த நல்லோர்

செழுநபியே முஹம்மதரே
வாழியரோ வாழி.

17

வல்லவனே அவனேவல்
மலக்குகளை மறையை

வரவிட்ட நபிகளென்ற
தூதுவரை மற்றும்

சொல்லரிய மறுவுலகை
யிறுதித்தீர் வுநாளைச்

சொர்க்கமொடு நரகத்தை
நம்புவது முஸ்லிம்

நல்லபெரும் ஈமானின்
கடமையெனத் தந்த

நாடுபுகழ் மேலவரே
வானவரும் போற்றும்

எல்லையிலாக் கருணையுள
ஆண்டவனின் தூதே

எங்களரும் முஹம்மதரே
வாழியரோ வாழி.

# 18

யாதிஸ்லாம் என்றோர்க்குப்
பசித்தோருக் குணவும்

இன்சொல்லும் ஆகுமெனச்
சுருக்கியுரைத் திட்ட

ஆதியிறை வன் தூதே
இன்சொல்பு கன்றே

அரும்பசிக்கு ணவளித்துப்
பசித்திருந்த வள்ளால்

போதிப்பைச் செயல்படுத்திப்
பிறருக்குரைத் திட்ட

பேசரிய பெரியவனின்
தூதுவரே யாவும்

ஓதிடாது ணர்ந்தவரே
உத்தமரே அன்பின்

உருவான முஹம்மதரே
வாழியரோ வாழி.

## 19

துன்பத்தைத் தாங்கிடுதல்
சுகம்குறைத்துக் கொள்ளல்

துயருற்ருேர்க் குதவிடுதல்
சுற்றத்தார் பேணல்

இன்பத்தை வெறுத்திடுதல்
இல்லார்க்கு வழங்கல்

இதயத்தின் கருணையினுல்
எளியோரைக் காத்தல்

அன்புவடி வாகிடுதல்
அண்டினேருக் குதவல்

ஆனயிவை இஸ்லாத்தின்
ஒருபகுதி என்ற

சன்மார்க்கத் தூதுவரே
சகம்புகழும் இறுதித்

தனிநபியே முஹம்மதரே
வாழியரோ வாழி.

# 20

செல்வந்தனை வல்லிறைவன்
தந்திடுதல் அதனைச்
சேர்த்துவைத்துத் தான்மட்டும்
சுகிப்பதற்காய் அல்ல

பல்வகையில் நொந்துகெட்ட
ஏழையர்த மக்குப்

பகிர்ந்தளிக்க வாகுமது
மட்டுமல்ல கற்று

நல்லஅறி வாளரென
மானியென வறுமை

நலிந்தெடுக்க வாழ்ந்திடுவார்
கேட்டுப்பெற மாட்டார்

செல்வமவர் தமக்காக
இறையுமக்க ளித்தான்

தெரிகவென்ற முஹம்மதரே
வாழியரோ வாழி.

எண் 8436
தேதி

## 21

பலன்கருதா திறைவழியில்
பண்ணுவதே தருமம்

பலரறியப் பிறர்மதிக்கப்
பண்ணுகிறதெல்லாம்

நலன்தராது மறுமையினில்
நல்லோனின் சமுகம்

நாடுகின்ற நாளினிலே
பலனேதும் தாரா

புலனடக்கித் தருமத்தைத்
தருமவழி நின்று

புரிந்திடுவீர் எனவுரைத்த
புகலரிய ஞான

நிலன்வியக்கும் நாயகமே
வையமெலாம் வாழ்த்தும்

நீதியரே முஹம்மதரே
வாழியரோ வாழி.

## 22

நல்லதையே செய்வதென
நிச்சயித்துக் கொள்க

நாளும்அதன் படிநடக்க
நல்லுறுதி செய்க

பொல்லாங்கைப் பார்ப்பதில்லை
மொழிவதில்லை காதால்

பொல்லாங்கைக் கேட்பதில்லை
கையாலும் வாழ்வில்

பொல்லாங்கைத் தொடுவதில்லை
எனஉறுதி கொண்டால்

பொறைமிகுந்த இறையதனை
நிறைவேற்றி வைப்பான்

சொல்லுமிதைக் கடைப்பிடித்து
நடந்திடுவீர் என்று

சொன்னநபி முஹம்மதரே
வாழியரோ வாழி.

## 23

பசித்திருப்போர் பார்த்திருக்கப்
பருஉணவு உண்போர்

பதுக்கிவைத்துப் பண்டங்களைக்
கொள்ளைவிலை விற்போர்

நசித்திருக்க மக்களெல்லாம்
நல்வாழ்வு வாழ்வோர்

நல்லுயிரைத் துன்புறுத்தும்
நாசக்குணங் கொண்டோர்

விசித்திரமாய் ஆடையணி
பூண்டுலாவித் திரிவோர்

வித்தையேது மில்லாமல்
சோம்பித்துயில் கொள்வோர்

வசித்திடுவர் மறுவுலகில்
நரகினிடை என்ற

வள்ளல்நபி முஹம்மதரே
வாழியரோ வாழி.

முழங்காலை மறைக்கும்படி
ஆடையிட ஆண்கள்

முழுஉடம்பும் மறைத்திடுகப்
பெண்குலத்தார் வாழ்வில்

பழம்பெருமை பேசுவதை
விட்டிடுக இறையைப்

பணிவதிலே அணுவளவும்
பிசகாதி ருக்க

ஒழுங்காக வாழ்ந்திடுகப்
பிறர்க்குதவி செய்க

உலகிலுள்ள பிறமதத்தைத்
திட்டாதி ருக்க

எழில்மிகுந்த தீனவரே
என்றுரைத்த எங்கள்

ஏற்றமுள்ள முஹம்மதரே
வாழியரோ வாழி.

அழகிற்காய் உடையுடுத்தல்
ஆகாது படுக்கை

அறையிலின்றி அலங்காரம்
பெண்களுக்குத் தீது

தொழிலிற்காய்த் தொழுகைதனை
விட்டிடுதல் பாபம்

சோம்பேறி வாழ்க்கையினர்
நரகினிடை வீழ்வார்

அழிவிற்கு வழிகாட்டும்
எளிமையிலா வாழ்க்கை

அகம்பாவக் காரரென்றும்
ஈடேற மாட்டார்

எழிலார்ந்த மானிடரே
யிவையறிவீ ரென்றே

எடுத்துரைத்த முஹம்மதரே
வாழியரோ வாழி.

## 26

பெருஞ்செலவில் வீடுகட்டல்
ஆகாத செய்கை

பேசரிய கலைப்பொருளில்
காசுகொட்டல் வீணும்

அருஞ்செல்வம் பொன்வெள்ளி
யாகுமது கொண்டே

அரசரென வாழ்ந்தாலும்
பாத்திரம்செய் யாதீர்

தருங்கெடுதி பெருஞ்சிரிப்பும்
கடுங்கோபம் தானும்

தவிர்த்திடுக இவைவாழ்வில்
என்றைக்கும் என்ற

அருங்குணத்து நாயகமே
ஆண்டவனின் தூதே

அருள்வடிவ முஹம்மதரே
வாழியரோ வாழி.

# 27

மார்க்கவழி நடப்பதிலே
இவன்சிறந்தோன் என்று

மற்றவர்கள் புகழ்வாரென
மனத்திலெண்ணிக் கொண்டு

நேர்வழியில் இறைவனிடம்
பற்றில்லா நெஞ்சார்

நிகழ்த்துகின்ற 'செயலரிய
தாயிருந்த போதும்

ஓர்ந்திறைவன் ஓர்நாளும்
அதையேற்க மாட்டான்

உலகத்தார் புகழ்வதினுல்
பயனேது மில்லை

தேர்ந்திறைவன் உவக்கவெனச்
செயல்புரிக என்ற

திருநபியே முஹம்மதரே
வாழியரோ வாழி.

அறஞ்செய்த ழிந்தவர்கள்
உலகினிலே இல்லை

அனியாயக் கொடுஞ்செயலார்
சூழ்ந்துசெயும் தீய

மறச்செயலைத் தாங்குவோர்க்கு
மறுவுலகில் அல்லாஹ்

வகுத்தளிக்கும் நல்லருளுக்
கிணையேது மில்லை

இறைவனிட் மல்லாது
மற்றையோ ரிடத்தில்

இறைஞ்சிக்கை யேந்துவோர்க்கு
மீட்சியென்ப தில்லை

அறிந்துநடந் திடுகயிதை
நல்லோர்கள் என்றே

அறிவித்த முஹம்மதரே
வாழியரோ வாழி.

எண்ணத்தில் தீதெண்ணி
இயலாமை யாலே

எண்ணத்தை நிறைவேற்ற
முடியாதி ருப்போன்

மண்ணகத்தில் தீச்செயலைச்
செய்தவனே யாவான்

மறுவுலகில் இறைத்தீர்ப்பில்
துன்புற்றே நிற்பான்

எண்ணரிய வினைசெய்யும்
என்னருஞ்சோ தரர்காள்

எண்ணத்தை நலதாக்கிச்
செயல்படுவீர் என்ற

விண்ணவரும் புகழ்ந்தேத்தும்
வகையினிலே வாழ்ந்த

வித்தகரே முஹம்மதரே
வாழியரோ வாழி.

## 30

ஆடைகளால் அணிமணியால்
அத்தர்போன் றவையால்

அலங்கரித்து முகம்மினுக்கிப்
பவனிவரு வோரே

தேடித்தினம் பணம்பெருக்கிச்
சீமானுய் வாழும்

செருக்காலே ஏழைகளை
மதிக்காதி ருப்பீர்

நாடியுங்கள் அழகினையோ
பணப்பெருக்கந் தனையோ

நல்லிறைவன் பார்ப்பதில்லை
நாளுமுங்கள் செயலும்

கூடுகின்ற நினைப்பையுமே
நோக்குகின்ருன் என்ற

குணக்குன்றே முஹம்மதரே
வாழியரோ வாழி.

31

திருப்பித்தரும் நோக்கின்றிக்
கடன்வாங்கு கின்ற

செயலர்களும் திருடரென
ஆகின்றார் திருடன்

இருப்பிடத்தை அறிந்தெடுத்துச்
செல்கின்றான் இவரோ

எதிர்ப்பட்டு நயம்பேசி
வாங்கிச்செல் கின்றார்

ஒருப்பட்ட நிலையினிலே
இருவருமே ஒன்றாம்

ஓர்ந்திடுக எனஎடுத்து
உரைத்திட்ட நல்ல

திருப்பெற்ற ஆண்டவனின்
திருத்தூதே உலகைத்

திருத்தவந்த முஹம்மதரே
வாழியரோ வாழி.

கொள்ளைலாபம் கூடாது
வணிகத்தில் என்றீர்

குறைத்தளந்து விற்காதீர்
என்றெடுத்துச் சொன்னீர்

எள்ளிநகைத் திகழாதீர்
எளியவரை என்றீர்

யாருமற்ற ஏழைகளைக்
காக்கவும்ப ணித்தீர்

தள்ளியெந்த ஏழையையும்
அமரும்படி சொன்னால்

தண்டிப்பான் நல்லிறைவன்
என்றெடுத்து ரைத்தீர்

அள்ளியள்ளிப் பேரின்ப
அமுதெமக்க ளித்த

ஆதிநபி முஹம்மதரே
வாழியரோ வாழி.

வறுமையிலே வாடிமிக
நொந்துகெட்ட போதும்

மானிடரே கையேந்தி
இரந்திடல்செய் யாதீர்

சிறுமையது மட்டுமல்ல
காலமெலாம் அந்தச்

சீரழிவி லிருந்துநீர்
விடுபடவே மாட்டீர்

வெறுத்திடுவார் மாந்தரும்மை
ஆதலினுல் நீவீர்

மிகச்சிறிய அளவிலேனும்
தொழிற்செய்ய முயல்வீர்

உறுதியுடன் உழைப்பதிலே
மேன்மையுண்டென் றுரைத்த

உத்தமரே முஹம்மதரே
வாழியரோ வாழி.

# 34

நண்பர்களே சொர்க்கத்தின்
அதிகாரி தம்மை

நாமுமக்குத் தெரிவிக்க
வேண்டாவோ என்று

பண்புடைய தோழர்தமைப்
பார்த்தன்று கேட்டீர்

பகருங்கள் நாயகமே
என்றார்கள் அவர்கள்

கண்குழிந்து மேனிஎலாம்
அழுக்கடைந்து கந்தை

கட்டியநற் கோலத்தில்
வறிஞர்களாய்த் தெருவில்

திண்டாடித் திரிபவரே
சொர்க்கத்ததி காரி

தெரிகவென்ற முஹம்மதரே
வாழியரோ வாழி.

## 35

மானிடரில் நல்லவர்கள்
யாரென்றே ஓர்நாள்

வள்ளலேநும் மிடத்தினிலே
சகாபாக்கள் கேட்க

தானிருக்கும் வீட்டருகே
வாழ்ந்திருக்கும் மாந்தர்

தக்கவரென் றுரைக்கும்படி
வாழ்பவரே என்றீர்

கோனெனவே பதவிபெற்றும்
குடிசையிலே வாழ்ந்த

குணக்குன்றே குவலயத்தைத்
திருத்தவந்த தூதே

வானவரும் வாழ்த்தத்தினம்
மறையவனும் வாழ்த்த

வாழ்ந்தவரே முஹம்மதரே
வாழியரோ வாழி.

உழைக்காமல் வாழ்ந்திடுதல்
இஸ்லாம்நெறி யாகா

உண்ணுவதைத் தனித்துண்ணல்
இஸ்லாம் நெறியாகா

பிழைக்கவெண்ணிப் பொய்யுரைத்தல்
இஸ்லாம்நெறி யாகா

பித்தலாட்டம் கொலைகளவும்
இஸ்லாம்நெறி யாகா

கழைக்கூத்தா டிடுதலுடன்
காண்பதுவுங் கூடக்

கணித்துரைக்கின் மேலான
இஸ்லாம்நெறி யாகா

தழைக்கயிவை நும்மனத்தில்
என்றுரைத்த மேலோன்

தகுநபியே முஹம்மதரே
வாழியரோ வாழி.

மானிடரைப் புகழ்ந்திடுதல்
இஸ்லாம்நெறி யாகா

மறைவாகப் புறம்பேசல்
இஸ்லாம்நெறி யாகா

வீணிலிடர் செய்திடுதல்
இஸ்லாம்நெறி யாகா

மிகுத்துணவு தானுண்ணல்
இஸ்லாம்நெறி யாகா

தானடங்கா மனப்போக்கும்
இஸ்லாம்நெறி யாகா

தனைப்பிறருக் கடிமையிடல்
இஸ்லாம்நெறி யாகா

வானிடத்தின் கீழுலகில்
வாழுகின்றோர்க் கிவற்றை

வகுத்துரைத்த முஹம்மதரே
வாழியரோ வாழி.

# 38

படாடோப வாழ்க்கையுமே
இஸ்லாம்நெறி யாகா

பசித்தோரை விட்டுண்ணல்
இஸ்லாம்நெறி யாகா

அடாவடிசெய் கின்றதுமே
இஸ்லாம்நெறி யாகா

அக்கிரமம் புரிந்திடுதல்
இஸ்லாம்நெறி யாகா

கொடாதுபணம் சேர்ப்பதுவும்
இஸ்லாம்நெறி யாகா

குடிப்பதுவும் நடிப்பதுவும்
இஸ்லாம்நெறி யாகா

திடமாயிதை அறிந்திடுக
நல்லவரே என்ற

திருநபியே முஹம்மதரே
வாழியரோ வாழி.

வட்டிப்பண வாழ்க்கையினர்
இஸ்லாமிய ராகார்

வன்மைமிகும் பகைக்குணத்தார்
இஸ்லாமிய ராகார்

வெட்டிப்பேச் சுடையோரும்
இஸ்லாமிய ராகார்

வினைச்சுத்தம் இல்லாதார்
இஸ்லாமிய ராகார்

கட்டிப்பணம் காப்பவர்கள்
இஸ்லாமிய ராகார்

கடவுளையே நம்பாதார்
இஸ்லாமிய ராகார்

சுட்டியிவை போற்பலவும்
சொன்னவரே வல்லோன்

தூதுவரே முஹம்மதரே
வாழியரோ வாழி.

# 40

தலைபோவ தாயினுமே
பொய்சொல்லல் தீது

தாய்பசித்தி ருந்திடினும்
திருடுவது தீது

அலையலையாய்த் துன்பங்கள்
வந்துற்ற போதும்

அஞ்சுவதும் பிறரிடம்போய்க்
கெஞ்சுவதும் தீது

மலைமலையாச் செல்வந்தான்
குவிந்திட்ட போதும்

மமதையினால் தலைகனத்துத்
துள்ளுவது தீது

சிலைவணக்கம் இவைக்கெல்லாம்
மேலான தீது

தெரிகவென்ற முஹம்மதரே
வாழியரோ வாழி.

## 41

இறையோனுக் கிணைவைத்தல்
தீதினுமே தீது

எவ்வுயிரும் தம்முயிர்போல்
எண்ணுமை தீது

முறையின்றி உயிர்வாதை
செய்குவது தீது

முழுப்பாலும் கறந்துகன்றைக்
கொல்லுவது தீது

அறைகூவல் வாள்வீசல்
தற்காப்பிற் கின்றி

அடுபோரை விரும்புவது
தீதென்று ரைத்த

இறையவனின் தூதுவரே
அன்புவடி வான

இனியவரே முஹம்மதரே
வாழியரோ வாழி.

## 42

எப்பாடு பட்டேனும்
கற்றிடுதல் நன்று
எவர்கேட்ட போதிலுமே
யீகுவது நன்று
தப்பேதும் செய்யாத
வாழ்க்கைமிக நன்று
தனக்கென்று வாழாமை
யாவினுமே நன்று
ஒப்பரிய பெரும்பதவி
கிடைத்திட்ட போதும்
உம்வாழ்விற் கதைப்பயன்ப
டுத்தாமை நன்று
செப்பிடுவார் பலகடவுள்
ஒப்பாமை நன்று
தெரிகவென்ற முஹம்மதரே
வாழியரோ வாழி.

# 43

பிறருக்காய் உன்னுணவைக்
குறைத்திடுதல் நன்று

பிறருக்காய் உன்சுகத்தை
விட்டிடுதல் நன்று

பிறருக்காய்ப் பொருளீட்டல்
நன்றினுமே நன்று

பிறர்பொருளுக் காசையிலாப்
பேராண்மை நன்று

உறவுக்காய் ஓரவஞ்சம்
பேசாமை நன்று

ஒன்றுபட்ட வாழ்வுபெற
தியாகம்செயல் நன்று

துறவுக்கும் மேலாகும்
இல்வாழ்க்கை என்ற

தூயவரே முஹம்மதரே
வாழியரோ வாழி.

அயல்வீட்டார் பசித்திருக்க
உணவுண்டு மகிழ்வோன்

ஆண்டவனின் நல்லடியான்
ஆகிடவே மாட்டான்

அயலிலுள்ளார் துன்பத்தைத்
துடைத்தோட்டா மனிதன்

ஆண்டவனை நேசிக்கா
அரும்பாவி யாவான்

துயருறுவார் தமக்குதவும்
பண்புடையார் நாளைச்

சொர்க்கத்தில் இன்புறுவார்
என்றுரைசெய் திட்ட

நயமுடைய நாவுடைய
ஆண்டவனின் தூதே

நாயகமே முஹம்மதரே
வாழியரோ வாழி.

மரணமுற்ற மனிதன்தனைப்
பின்தொடர்ந்து செல்லும்

வகைக்கான தேவையென்று
தெரிந்திடுவீர் உலகீர்

தருந்தருமம் தான்பெற்ற
உயர்ஞானம் மற்றும்

தான்பிறருக் கறிவித்த
நற்கல்வி யின்னும்

அருந்துதற் களித்திட்ட
தண்ணீர்நல் லுணவு

அன்புடைய உபசரிப்புப்
பாவபுண்ணி யங்கள்

பொருந்தவுடன் செல்லுபவை
புரிகவென் றுரைத்த

புனிதநபி முஹம்மதரே
வாழியரோ வாழி.

கொடுநரகாய் உலகிதனை
நினைப்பவனே ஒழுக்கம்

குன்றுத நன்னடத்தைக்
காரணுகும் வாழ்வில்

தொடுமின்ப சொர்க்கமென
யிவ்வுலக வாழ்வைச்

சுகித்துமகிழ் கின்றவனே
கொடுங்குணத்தான் கண்ணில்

படுமிந்த காட்சிதனைக்
காணுகின்ற போது

பதித்திடுக யார்மேலோர்
யார்கீழோர் என்று

நடுநின்ற நெஞ்சினரே
எனவுரைத்த வல்லோன்

நன்நபியே முஹம்மதரே
வாழியரோ வாழி.

உண்மையான மேன்மகன் தன்
வாழ்நாளில் பிறரை

உள்நோக்கம் பேசுகின்ற
குணமில்லான் காண்க

உண்மையான மேன்மகன் தன்
வாழ்நாளில் பிறரை

ஒருபோதும் சபித்திடுதல்
செய்திடவே மாட்டான்

உண்மையான மேன்மகன் தன்
வாழ்நாளில் என்றும்

ஒழுக்கநெறி தவறும்படி
நடந்திடவே மாட்டான்

கண்ணுள்ளார் கண்டிடுக
என்றுரைத்த எங்கள்

கருணைமிகு முஹம்மதரே
வாழியரோ வாழி.

தனக்கொன்றும் பிறரிடத்தில்
வேண்டாதான் யார்க்கும்

தன்னிடத்தில் உள்ளதனைக்
கொடுத்திடவும் அஞ்சான்

மனம்நோகப் பிறர்செய்யும்
கொடுமைதனைத் தாங்கும்

வலுவான இதயத்தைப்
பெற்றிருப்பான் வாழ்வில்

முனைந்தெவர்க்கும் தீங்கெண்ணச்
செய்யவுமே மாட்டார்

மூமினாய் வாழ்பவனின்
நிலையிலிது பகுதி

எனஎடுத்தே எமக்குரைத்த
இறையவனின் தூதே

எழிலார்ந்த முஹம்மதரே
வாழியரோ வாழி.

## 49

பெற்றோர்க்குக் கீழ்படிய
மறுப்பதுவும் பெண்டீர்

பெருந்துன்பம் ஏற்கும்படி
செய்குவதும் தேவை

அற்றதொரு நிலையினிலே
யாசித்து வாழ்தல்

ஆகாத வழியினிலே
சொத்தினைய ழித்தல்

குற்றமொடு வல்லவனின்
கோபத்தில் சேர்க்கும்

கூடாது மானிடரே
இத்தகைய செய்கை

முற்றுமிவை விட்டிடுக
என்றுரைத்த நல்லோர்

வாழ்த்துகின்ற முஹம்மதரே
வாழியரோ வாழி.

# 50

இறந்தோரின் சமாதியின்முன்
இருகரங்கள் ஏந்தி

இறைவனிடம் அன்னோர்க்கு
நற்பதவி யீய

சிறந்தமுறை தன்னில்துதி
செய்திடுதல் அன்றி

செத்தோரை நமக்காக
வேண்டும்படி கோரல்

முறையல்ல பாவமது
விட்டிடுக என்று

விளம்பியநல் லிறையவனின்
மேலான தூதே

மறைகள்புகழ்ந் தேத்துகின்ற
யிறுதிநபி யான

வான்புகழும் முஹம்மதரே
வாழியரோ வாழி.

51

8436

மறைகளிலே மறைந்திருக்கும்
மறைவான பொருளை

மனமோர்ந்து சிந்தித்ததன்
உண்மைதனைக் கண்டு

இறையவனின் ஏவலெது
விலக்கலெது என்று

விளங்கியதன் படிநடக்கும்
மானிடனே மேலோன்

பறையறைவ போல்மேலோன்
நான்என்று கூறிப்

படைத்தவனின் மார்க்கத்தை
உள்ளபடி உணராக்

குறைமனத்தார் குதர்க்கத்தை
நம்பாதீர் என்ற

கோதில்லா முஹம்மதரே
வாழியரோ வாழி.

அஞ்சுவது மானிடரே
ஆண்டவனுக் கல்லால்

யாருக்கும் இல்லையிதை
அறிந்திடுக நீரும்

வஞ்சித்தல் நம்பிக்கை
மோசஞ்செய் திடுதல்

மனமறிந்து பொய்யுரைத்தல்
ஆனயிவை யெல்லாம்

கிஞ்சித்தும் நல்லோர்கள்
செய்கைஎன ஆகா

தெரிந்திடுக எனஉரைத்த
ஆண்டவனின் தூதே

பஞ்சையரின் தோழரென
வாழ்ந்திட்ட நபியே

பார்புகழும் முஹம்மதரே
வாழியரோ வாழி.

வணங்கிடுதல் ஆண்டவனுக்
கன்றிப்பிறர்க் கில்லை

வாழுவது பிறருக்காய்
தனக்குமட்டு மன்று

பிணங்குவது நல்லதல்ல
யாரிடமும் தீமை

பேசுவதும் செய்குவதும்
எண்ணுவதும் பாவம்

அணங்குகளை மதுக்கடையைச்
சூதாடும் இடத்தை

அணுகுவதே ஆண்டவனை
மறந்தவரின் செய்கை

இணங்கியிதை அறிந்திடுக
எனவுரைத்த நல்லோர்

இதயம்வளர் முஹம்மதரே
வாழியரோ வாழி.

# 54

தாயாரைத் தந்தையரைப்
பேணிடுதல் பெற்ற

தம்மக்கள் தமைக்கல்வி
தந்துயர்வாக் கிடுதல்

நோயாளி தனைவினவல்
நூல்கற்ற மானி

நொந்திருந்தால் அவர்க்குதவி
செய்வித்துக் காத்தல்

தீயோரின் கூட்டுறவில்
சேராதி ருத்தல்

சேர்ந்திறையைத் தொழுவதையே
மிகவிரும்பிக் கொள்ளல்

தூய்தான நன்நெறியாம்
தெரிகஇவை என்று

சொன்னநபி முஹம்மதரே
வாழியரோ வாழி.

எத்தொழிலைச் செய்தாலும்
இழிவில்லை வறிஞர்க்

கீவதுபோல் சிறப்பான
செயலேதும் இல்லை

நித்திரையைக் குறைப்பதுபோல்
நல்லதொன் றுமில்லை

நேர்மைக்காய்ச் சாவதிலும்
தியாகம்வே றில்லை

உத்தமரை மனம்நோகச்
செய்வதினும் கெட்ட

உலுத்தசெயல் பிரிதேதும்
இல்லவே யில்லை

உணர்கயிதை மேலவரே
எனஎடுத்துச் சொன்ன

உயர்நபியே முஹம்மதரே
வாழியரோ வாழி.

## 56

கன்றுபல யீன்றளித்துப்
பால்வழங்கிச் சுமைகள்

கணக்கின்றித் தான்சுமந்து
வாகனமாய்த் திகழ்ந்து

நன்றுழைத்துக் கிழமான
ஒட்டகையை வளர்த்தோன்

நயந்தறுத்துத் தின்றிடலாம்
வேலைக்கினி யுதவா(து)

என்றெண்ணிப் பிடிப்பதற்குத்
துரத்துவதை கண்டே

இரும்இதனை அறுத்துண்ணல்
தீதாகும் செய்த

நன்றிதனை மறப்பதுவோ?
கொண்டேகி வளர்ப்பீர்

என்றுரைத்த முஹம்மதரே
வாழியரோ வாழி.

மனமறிந்து பாவங்கள்
செய்திட்ட போதும்

மன்னிப்பான் நல்லிறைவன்
இரக்கமுண்டு மாஞல்

எனும்உண்மை தாசிப்பெண்
நாய்க்குநீர் வார்த்த

நன்னிகழ்ச்சி யாலுணர்த்தி
யீகையிலா மாது

தினம்தொழுதும் பூனைதனைச்
சாகும்வரை கட்டிப்

போட்டுணவு நல்காத
காரணத்தால் வெம்மை

அனல்பறக்கும் தீநரகில்
சேர்ந்தாளெனச் சொன்ன

அருநபியே முஹம்மதரே
வாழியரோ வாழி.

உண்ணுவதற்கு வேறுவகை
யில்லாத போது

உயிரினத்தை அறுத்துண்ணல்
தீதல்ல மற்றும்

நன்மருந்துக் கென்றாலும்
வேறுமருந்தி ருந்தால்

நல்லுயிரைக் கொல்லுவது
சரியலவென் றுரைத்து

மண்ணுலகில் உயிர்க்கொலையைக்
குறைக்கும்படி செய்து

தன்னுயிர்போல் பிறவுயிரை
எண்ணிநடந் திட்ட

நன்நபியே ஆண்டவனின்
திருத்தூதே எங்கள்

நாயகமே முஹம்மதரே
வாழியரோ வாழி.

ஈச்சோலைக் குடிசையிலே
வாழ்ந்திட்டீர் தைக்க

இனியில்லை இடமென்ற
ஆடைதனை அணிந்தீர்

காய்ச்சமரம் தனிலேறிக்
கனிபறித்த ளித்துக்

கைதனிலே கூலிபெற்றுக்
குடும்பத்தைக் காத்தீர்

பேச்செல்லாம் செயலாக்கிப்
பெருமைமிகக் கொண்டீர்

பிறர்யாரும் வகுத்துரைக்காப்
பேருண்மை புகன்றீர்

போச்சுதினித் தீமையென
தீன்நெறிபு கன்றீர்

பேரருளே முஹம்மதரே
வாழியரோ வாழி.

# 60

கள்ளுண்பான் நன்னெறியில்
நில்லாதான் என்றீர்

கற்பழிப்பான் படுநரகில்
வீழ்ந்திடுவான் என்றீர்

உள்ளியுள்ளி யிறைவன்தனை
வணங்காத பேர்கள்

உண்மையிலே உயர்நெறியில்
ஒழுகாதார் என்றீர்

துள்ளுகின்ற மனமடக்கித்
துன்பந்தனைத் தாங்கித்

துயருற்றோர் தமக்குதவ
மாட்டாத மாந்தர்

நள்ளெரியில் பாழ்நரகில்
வீழ்ந்திடுவார் என்ற

நாயகமே முஹம்மதரே
வாழியரோ வாழி.

இறப்புலகை நாடிடுங்கால்
உம்முடைய வீட்டில்

இருந்தபொருள் ஈச்சம்பாய்
தோல்கொண்டு செய்த

அறப்பியந்த தலையணையும்
ஜுப்பாவும் உடுத்தும்

ஆடையுடன் மிகத்தேய்ந்த
பாதக்குற டிவையே

'நிரப்ப'முடன் இருந்ததென
நிகழ்சரிதம் கூறும்

நீரந்தப் போதினிலே
நாடாண்ட மன்னர்

முறைப்படிநீர் வாழ்ந்ததினுல்
பணம்சேர்க்க வில்லை

மேலான முஹம்மதரே
வாழியரோ வாழி.

வாளெடுத்தான் வெட்டுதற்கே
வன்நெஞ்சன் ஒருவன்

வழுக்கியந்த வாள்வீழ்ந்த
ததையெடுத்தே அன்னோன்

நீள்கரத்தி லேகொடுத்து
இறைவனுனைக் காக்க

நெடிதுநாள் நன்னெறியில்
வாழ்கவெனக் கூறி

ஆளனெனும் படைத்திட்ட
ஆண்டவனை யின்றி

அவனியிலே ஓரணுவும்
அசையாதெனும் உண்மை

ஆழமதாய் மக்கள்மனம்
தனில்பதிய வைத்த

அருளரசே முஹம்மதரே
வாழியரோ வாழி.

# 63

செய்பிழைக்கு நொந்துகண்ணீர்
சிந்தியிறை யிடத்தில்

திருந்திமனம் மன்னிப்புக்
கேட்கலின்றி மீட்சி

எய்திடற்கே வழியில்லை
தாய்தந்தை யாரின்

எழில்வாழ்த்தைப் போன்றுயுள்
விருத்திக்கு மருந்து

மெய்யாக வேறில்லை
அறிந்துநடந் திடுக

மேலான மானிடரே
என்றுரைசெய் திட்ட

துய்யயிறைத் தூதேளம்
துயரறுக்க வந்த

துணையேநன் முஹம்மதரே
வாழியரோ வாழி.

சேர்ந்துவாழப் பழகிடுக
அதனுலே வாழ்வில்

சிரமம்பல வந்திடினும்
துணிந்தேற்றுக் கொள்க

சோர்ந்துபிரிந் தேகுதற்கு
நினையாதி ருக்க

தொல்லைபல தந்திடினும்
அதனைத்தாங் கிடுக

போந்திறைவன் சேர்ந்துவாழும்
பேர்க்கருளல் போன்று

பிணங்கிடுவார்க் கருள்வதிலை
என்றுரைசெய் திட்ட

வேந்தரேநன் நெறிவாழ்ந்த
வித்தகரே வையம்

விளங்கவந்த முஹம்மதரே
வாழியரோ வாழி.

# 65

தனக்கொன்றை வேண்டிடுங்கால்
தம்போன்ற மற்ருேர்

தமக்கும்அது போல்கிடைக்க
வேண்டுவதே மேலாம்

தனக்குத்தீங் கானவொன்றை
மற்ருேர்க்கும் தீங்காய்த்

தானினைத்தொ துக்குவதே
நற்பண்பென் ருகும்

தனக்கொன்றும் பிறர்க்கொன்று
மாய்நினைக்கும் பேர்கள்

தாழ்வான குணமுடையோர்
ஆகிடுவார் இதனை

நினைந்தொழுகும் மானிடனே
மேலவன்என் றுரைத்த

நீதியரே முஹம்மதரே
வாழியரோ வாழி.

தான்பெற்ற குழந்தைகளைக்
காட்டினும்மே லாகத்

தனைப்பெற்றோர் தமைக்காத்தல்
மிகப்பெரிய கடமை

மானொத்த விழிபடைத்த
மங்கையரின் கற்பை

மாண்புறவே காத்திடுதல்
ஆண்குலத்தார் கடமை

தான்உழைத்துப் பிழைக்கின்ற
தொழிலாளி மகிழத்

தக்கபடி கூலிதரல்
முதலாளி கடமை

தெனொத்த நல்லோரே
உணர்கஇதை என்ற

திருநபியே முஹம்மதரே
வாழியரோ வாழி.

பெறும்பேற்றில் மிகப்பெரிது
நன்நடத்தை யுள்ள

பெண்ணை மனைவியெனப்
பெற்றிடுதல் ஆகும்

உறும்இறைவன் சோதனையில்
மிகப்பெரிய ஒன்றும்

ஒழுக்கமிலாப் பெண்வந்து
மனைவியென வாய்த்தல்

சிறுபொழுதும் ஓய்தலின்றிக்
கணவனுக்குத் தொண்டு

செய்பவளே சிறப்பான
பெண்ணாகும் என்றே

அறுதியிட்டுப் புகன்றவரே
ஆண்டவனின் தூதே

அறிவொளியே முஹம்மதரே
வாழியரோ வாழி.

தன்னருகில் தன்மனைவி
தனையமரச் செய்து

தன்னைப்போல் அவளுண்ணச்
செய்திடுக கணவன்

மன்னும்உடை தனக்கெடுத்தால்
அவளுக்கும் எடுக்க

மற்றுமவள் இடத்திலென்றும்
அன்பாய்ப்பழ கிடுக

தன்மனைவி தனக்கடிமை
என்றெண்ணு திருக்க

தானவளை அடிப்பதனை·
நிச்சயம்த விர்க்க

என்றெடுத்து நன்குரைத்த
ஏற்றம்மிகு நபியே

எழிலார்ந்த முஹம்மதரே
வாழியரோ வாழி.

செய்கின்ற பாவங்கள்
அனைத்திற்கும் இறைவன்

திருவுள்ளம் நாடிடுமேல்
மன்னிப்புக் கிட்டும்

மெய்நோகப் பெற்றெடுத்த
தாய்தந்தைக் கிழைக்கும்

பெரும்பிழைக்கு மட்டும்என்றும்
மன்னிப்பே இல்லை

உய்த்திதனை ஓர்ந்துணர்ந்து
நடந்திடுக உலகில்

உறைகின்ற மானிடர்காள்
என்றுரைத்த வல்லோன்

மெய்தூத ரானவரே
வானவரும் வாழ்த்தும்

மேலான முஹம்மதரே
வாழியரோ வாழி.

தனக்குப்பால் தந்துதவித்
தன்னைச்சிறு வயதில்

தக்கபடி வளர்த்திட்ட
ஹலிமாவெனும் மாது

தனைக்காண வந்திடுங்கால்
தன்தோளில் உள்ள

தன்னுடைய மேல்துண்டைத்
தானெடுத்து விரித்து

தனக்குப்பலர் உபசரிப்புச்
செயும்பேறு பெற்றும்

தானவர்க்கு மெய்வருந்த
உபசரிப்புச் செய்து

தனைப்பெற்றோர் தமையுலோகர்
தாம்பேணும் முறைக்குச்

சான்றளித்த முஹம்மதரே
வாழியரோ வாழி.

சொர்க்கமெங்கே உள்ளதெனக்
கேட்டோர்க்குத் தாயார்

திருவடியில் உள்ளதென
நவின்றிட்டீர் செய்யும்

நற்செயல்கள் அனைத்திலுமே
தாய்தந்தைக் காற்றும்

நற்பணியே உயர்ந்ததென
நவின்றிட்டீர் பெற்ருேர்

சொற்காத்து மேலுமவர்
சுகமடையச் செய்வோர்

தூயஇறை மெச்சுகின்ற
தொண்டுசெய்தோர் ஆவார்

நற்பதவி மேலுலகில்
கிட்டுமவர்க் கென்ற

நன்நபியே முஹம்மதரே
வாழியரோ வாழி.

பெற்றோரைச் சார்ந்தன்றிச்
சொர்க்கமொடு நரகம்

பிரிதில்லை மானிடரே
அறிகயிதை நீரும்

உற்றேயவர் மனம்மகிழச்
செய்திடுங்கால் சொர்க்கம்

உமைச்சாரும் அவரழுதால்
நரகம்உமைச் சூழும்

கற்றிதனைத் தாய்தந்தை
மனம்மகிழச் செய்வீர்

கணமுமவர் மனம்வருந்தச்
செய்யாதீர் என்ற

தற்பரனின் தூதுவரே
ஆமீனுர் பெற்ற

தகுநபியே முஹம்மதரே
வாழியரோ வாழி.

பூகம்பம் புயற்காற்றுப்
போன்றவைகள் தீமை

புரிவோரை எச்சரிக்கப்
படைத்திட்டான் இறைவன்

மோகித்துத் தீயசெயல்
புரிகின்ற பேர்கள்

விட்டதனை நன்நெறியைப்
பற்றிடுதல் வேண்டும்

வேகமுடன் பாவந்தினம்
புரிகின்ற செல்வர்

மீதிறைவன் வேதனையை
இறக்கிடுவான் என்ற

ஆகமங்கள் புகழுமிறைத்
தூதுவரே தீமை

அகற்றவந்த முஹம்மதரே
வாழியரோ வாழி.

அழகிளமை இவற்றிஞெடு
வறுமையிடைப் பட்ட

ஆளனிலா விதவையெனும்
குழந்தையுள மாது

மழலைதனை வளர்ப்பதற்காய்
மறுமணத்தை நாடா

மனக்கட்டுப் பாடுடனே
வாழ்ந்திடுவா ளாகில்

இலையவளுக் கீடாஞள்
வையமிதில் என்றே

எடுத்துமிகத் தெளிவாக
விளக்கியுரைத் திட்ட

மலைநிகர்த்த மனம்படைத்த
இறையவனின் தூதே

மாநபியே முஹம்மதரே
வாழியரோவாழி.

தான்பெற்ற பிள்ளைகளில்
ஆணுக்குப் பெண்ணைத்

தாழ்வாக எண்ணுவது
சரியல்ல சமமாய்

தான்மதிக்க வேண்டும்தரும்
கல்வியிலும் ;செல்வம்

தன்னிலுமே தக்கநிலை
அவர்பெறுதல் வேண்டும்

ஊன்சுமந்த உலகினரே
உணர்கஇதை என்றே

உரைசெய்த மக்காநகர்
தனில்பிறந்த வள்ளால்

வான்கவிந்த மண்டலத்து
மக்களுய்ய நாளும்

மகிழ்ந்துழைத்த முஹம்மதரே
வாழியரோ வாழி.

ஒழுக்கமுடன் வாழும்படி
பிள்ளைகளைப் பயிற்றல்

ஒவ்வொருதாய் தந்தையரின்
முன்புள்ள கடனும்

புழுக்களென அழுக்குமனம்
கொண்டவராய்ப் பெற்ற

பிள்ளைகளை வளர்ப்பவரை
ஆண்டவன்தண் டிப்பான்

இழுக்காகும் மானிடரே
இதனைநன்கு ணர்ந்தே

இனியநெறி தனில்நடக்கப்
பிள்ளைகளை வளர்ப்பீர்

விலக்கலேவல் இன்னதென
விளக்கிடுவீர் என்றே

விளம்பியநன் முஹம்மதரே
வாழியரோ வாழி.

இறையவனின் அருட்கொடைகள்
யாவினிலும் மேலாய்

இயம்பிடலாம் துதிக்கின்ற
நாவுதனை மற்றும்

நிறைவுடனே செய்நன்றி
நினைக்கின்ற நெஞ்சம்

நிகழ்கின்ற விபத்துக்களைத்
தாங்கும்நல் லுடம்பு

குறையில்லாக் கற்புடைய
மனைவியுமே மேலோன்

கொடைகளிலே சிறப்புடைய
தாகுமென்று ரைத்த

மறையவனின் தூதுவரே
அப்துல்லா பெற்ற

மாமணியே முஹம்மதரே
வாழியரோ வாழி.

பணியாளர் செய்கின்ற
தவறுகளை எம்மைப்

படைத்தவனின் தூதுவரே
எத்தனைவி டுத்தம்

முனிவின்றிப் பொறுத்தருள
வேண்டுமெனத் தம்மை

வினவியதன் சகாக்களுக்கு
மகிழ்வோடு நீங்கள்

தினமொன்றுக் கேழுபத்து
முறையன்னோர் தம்மைச்

சீற்றமின்றிப் பொறுத்திடுதல்
கடனாகும் என்று

கனிவுடனே கூறிப்பணி
யாளர்க்கருள் செய்த

கருணைமிகும் முஹம்மதரே
வாழியரோ வாழி.

## 79

அன்பில்லா நெஞ்சமுள்ள
மானிடர்பால் இறைவன்

அன்புகொள்ளான் ஆதலினுல்
மானிடரே நீங்கள்

அன்புசெய்வீர் மக்களிடம்
மனைவியிடம் பெற்ருேர்

அண்டைஅய லாளரிடம்
ஏழையரி டத்தில்

நண்பரிடம் அன்புகொளல்
நல்லோரிடம் அன்பு

நாளெல்லாம் கொள்கவென
நல்லுரைகள் கூறி

என்புருக ஆண்டவன்பால்
அன்புசெய்தி ருந்த

இனியவரே முஹம்மதரே
வாழியரோ வாழி.

# 80

தனக்கின்னல் செய்தவரும்
திருந்திப்பின் முறையாய்

தனைச்சார்ந்தால் அவர்செய்த
தீமைகளை மறந்து

மனக்கலக்கம் இன்றியவர்
தமைத்தனது தோழர்

வரிசையிலே சேர்ந்தவரின்
மனம்மகிழச் செய்து

தனக்குநிகர் இல்லாத
கருணைவள்ளல் ஆனீர்

தண்ணளியே இஸ்லாம்என்
றுரைத்திட்டீர் என்றும்

வினைக்கரிய செயல்செய்த
ஆண்டவனின் தூதே

வித்தகரே முஹம்மதரே
வாழியரோ வாழி.

எதிரிகளின் மத்தியிலும்
தம்முடைய கொள்கை

இன்னதென இயம்புவதில்
சிறிதேனும் அச்சம்

அதிர்ச்சியிவை யில்லாமல்
சிங்கம்போல் நின்றே

அவர்மறுப்புச் சொல்வதற்கு
வகையேது மின்றி

புதிரேதும் இல்லாமல்
கேட்போர்க்குப் புரியும்

படிதனது கருத்துக்களை
நயம்படவே கூறும்

மதிநிறைந்த நாயகமே
ஆண்டவனின் தூதே

மாட்சிமிகும் முஹம்மதரே
வாழியரோ வாழி.

சொல்புதிது பொருள்புதிது
தூயோனை வணங்கித்

தொழும்முறைமை தன்னிலுமே
புதிதான பகுப்பு

கல்வியுள்ள மாந்தரின்றிக்
கல்லாத பேரும்

கண்டும்மைப் பின்தொடரும்
ஒழுக்கமுள்ள வாழ்க்கை

நல்லதையே பேசலின்றித்
தீதுரைசெய் யாத

நாவுடைய நாயகமே
ஆண்டவனின் தூதே

அல்நெறிய கல்வதற்கு
நன்நெறிய ளித்த

அறிவொளியே முஹம்மதரே
வாழியரோ வாழி.

கொள்ளையிட்ட கூட்டத்தார்
திருந்திநடந் திட்டார்

கொலைசெய்ய அஞ்சாதார்
அறஞ்செய்ய லானார்

கள்ளரென வாழ்ந்தவர்கள்
கல்விப்பணி கண்டார்

கன்னிவேட்டைக் காரரெலாம்
பெண்மதிக்க வாழ்ந்தார்

கள்ளுண்டு சூதாடிக்
களித்தவர்க ளெல்லாம்

கருணைமிகும் நாயகமே
உமைச்சேர்ந்த பின்பு

வெள்கித்தன் நிலைவிட்டு
நல்லவராய் ஆனார்

வேதநபி முஹம்மதரே
வாழியரோ வாழி.

பகற்கொள்ளை யிடுகின்ற
பாலைவன நாட்டில்

பழிக்கஞ்சா மறமாக்கள்
வாழ்ந்திருந்த நாட்டில்

மகப்பேறு பெண்ணாக
இருந்திட்டால் அதனை

மடித்திடுமாச் சிசுக்கொலைகள்
மலிந்திருந்த நாட்டில்

சகத்தார்கள் இகழுகின்ற
சழக்கரெனத் தீமை

தனைச்செய்வோர் தலைவர்களாய்
ஆகிவிட்ட நாட்டில்

யுகப்புரட்சி செய்துஅவரை
நல்லவராய்ச் செய்த

உத்தமரே முஹம்மதரே
வாழியரோ வாழி.

பெண்கள்நட மாடஅஞ்சிப்
பயந்திருந்த நாட்டில்

பேரழகு படைத்தஇளம்
பெண்ணொருத்தி தனியாய்

வண்ணமுற அலங்கரித்துப்
பொன்நகைகள் பூண்டு

வழிநடையாய் இரவுதனில்
சென்றிட்ட போதும்

கண்ணியமாய் அவட்குதவி
செய்தலன்றிக் கற்பைக்

கவருகின்ற காமுகரோ
திருடர்களோ யில்லாப்

புண்ணியநன் நாடமைத்த
ஆண்டவனின் தூதே

போதமிகும் முஹம்மதரே
வாழியரோ வாழி

## 86

இறைவணக்க அழைப்பொலியைக்
கேட்டவுடன் கேட்டோர்

எவ்வேலை செய்திருந்த
போதிலுமே யதனை

நிறைவேற்றுங் கடமையினும்
தொழுகின்ற கடமை

நிச்சயமாய் மேலென்ற
நினைப்புடனே செயலை

அரைகுறையில் விட்டுவிட்டுப்
பள்ளிவாசல் நோக்கி

அணியணியாய் விரைந்தோடுங்
காட்சிதனைக் காணும்

முறைமைதனை வையத்தார்க்
களித்திட்ட நல்லோர்

மனம்நிறைந்த முஹம்மதரே
வாழியரோ வாழி.

மக்களொரு திசைகொண்ட
மனைவியொரு திசையில்

மாண்புமிகு தோழரொரு
திசையிலெனப் பிரியத்

தக்கவனை மணத்திலெண்ணிப்
பிறந்திட்ட ஊரைத்

தான் துறந்து செல்லுகின்ற
வேளையிலும் தம்மை

மிக்கநம்பிப் பிறர்தந்த
அமானுதப்பொருள் தன்னை

மேவியவர் இடஞ்சேர்க்கச்
செய்திட்ட மேலோன்

தக்கஅரும் தூதுவரே
நன்நெறியு ரைத்த

தகுநபியே முஹம்மதரே
வாழியரோ வாழி.

# 88

ஆடையின்றிக் கஃபாவை
ஆண்களுடன் பெண்கள்

அணியணியாய்ச் சுற்றியதை
விட்டுவிடச் செய்தீர்

பாடுகின்ற பாட்டுகளில்
பேசுகின்ற பேச்சில்

படர்ந்திருந்த ஆபாசம்
தலைவிடுக்க வைத்தீர்

ஆடுகின்ற ஆட்டமொடு
மென்கலைக ளெல்லாம்

ஆகாது நன்நெறியாய்
நீக்கிடுக என்றீர்

கேடறியாச் சிந்தையுள
ஆண்டவனின் தூதே

கீர்த்தியுள முஹம்மதரே
வாழியரோ வாழி.

ஆபாசம் நடப்பதினுல்
ஆகாது கஃபா

ஆலயத்தை இடியுமென
நீர்சொன்ன தில்லே

மாபாசம் மிகவுற்றே
தன்னுடைய சுற்றம்

வாழ்வதற்காய்ப் பணந்தேடும்
பணிசெய்ய வில்லே

நீர்பாசம் கொண்டெனக்குப்
பணந்தேடித் தருதல்

நீங்காக்கடன் எனத்தோழர்
தமக்குரைத்த தில்லே

பூபாசம். கொண்டிறையை
மறந்திடாத மேலாம்

போதமிகு முஹம்மதரே
வாழியரோ வாழி.

மிக்குயர்வாய் மானிடர்கள்
ஒன்றுபட்டு வாழ்தல்

விட்டிடுக பகையுணர்வை
எனவுரைத்த வள்ளால்

அக்கிரம மாய்த்தன்மேல்
போர்தொடுத்த பேரை

அன்றியெவர் மீதிலும்மே
போர்க்கெழாத வேந்தே

பொக்கிஷமாய் உம்மிடத்தில்
போந்திருந்த செல்வம்

பொறுமையுடன் ஒழுக்கநெறி
ஈகைக்குணம் ஏழ்மை

தக்கவனின் தூதுவரே
தன்னலம்து றந்த

தயாபரரே முஹம்மதரே
வாழியரோ வாழி.

தனக்கென்று யாரிடத்தும்
எதையும்கேட் பதில்லை

தருவதையும் இனும்என்றால்
ஏற்றுக்கொள்வ தில்லை

தனக்கென்று தன்னுழைப்பில்
கிடைப்பதையுங் கூட

சங்கடத்தில் உழல்வோர்க்கு
வழங்கிடுதல் செய்து

மனக்கவலை சிறிதுமின்றி
வறுமையிலே வாழ்ந்து

வருவோருக் குண்பதையும்
பகிர்ந்தளித்தே அன்பால்

நினைக்கவொணுப் புகழ்தன்னைக்
காலடியில் கொண்ட

நேர்மைமிகும் முஹம்மதரே
வாழியரோ வாழி.

தனதுழைப்பால் படைத்திட்ட
அரசாட்சி தன்னை

தன்னுடைய சந்ததிக்கென்
ருக்கிக்கொள் ளாமல்

தனக்குப்பின் ஆட்சிதனக்
கார்வாரீ சென்று

சாசனமோ வாய்ச்சொல்லோ
ஏதும்அரு ளாமல்

தனக்குப்பின் தன்னுடைய
குடும்பத்தார் வாழ்க்கை

தனைப்பற்றிக் கொஞ்சமுமே
கவலைப்ப டாமல்

மனம்அடக்கி நேர்மையுடன்
அரசாட்சி செய்த

மன்னவரே முஹம்மதரே
வாழியரோ வாழி.

மகள்களுக்கு மனைவியர்க்கு
மனம்கவர்ந்த பேரர்

மருமகனுர் என்றிருந்த
சுற்றத்தார் யார்க்கும்

இகவாழ்வை நீர்முடித்த
வேளையிலே யாதும்

இனிதாகத் தனியாக
இயம்பிடவே யில்லை

சகம்வாழும் மானிடர்க்குச்
சாற்றியதே அவர்க்கும்

சாலும்என்ற தன்மையிலே
வறுமையிடை விட்டு

புகலரிய இறைநினைப்பில்
அவனடியைச் சார்ந்த

புண்ணியரே முஹம்மதரே
வாழியரோ வாழி.

## 94

தனக்காக இறைவனிடம்
வாழ்நாளில் எதையும்

தருகவென இரந்திடுதல்
செய்யாத செம்மல்

தனைச்சூழ்ந்தோ ராயிரம்பேர்
கொல்லவந்த போதும்

தன்மனதில் அச்சமேதும்
கொண்டறியா வீரர்

புனைந்தொன்றைக் கூறுகின்ற
வழக்கமிலா மேதை

புல்லுக்கும் தீங்கெண்ணு
நன்மனத்து வள்ளல்

அனைத்துலக மாந்தருமே
ஒன்றுபட மார்க்கம்

அளித்திட்ட முஹம்மதரே
வாழியரோ வாழி.

நிறத்தாலோ மொழியாலோ
நாட்டாலோ பேதம்

நினைக்காதீர் மானிடரில்
யாவருமே சமமாம்

மறக்காதீர் தீனோராய்
ஆகிவிட்ட எவரும்

வாழ்க்கையினில் உடன்பிறப்புச்
சோதரராம் என்ற

அறத்தரசே ஆலயத்தில்
உணவுண்ணும் இடத்தில்

அரசனையும் ஆண்டியையும்
சமமாக்கி வைத்த

இறைத்தூதே புரட்சிமிகும்
இஸ்லாம்மதம் தந்த

இனியவரே முஹம்மதரே
வாழியரோ வாழி.

எந்திரத்தால் சந்திரனைத்
தொட்டுவிட்ட இன்றும்

இழிவாக நீக்ரோவை
எண்ணுகின்றான் மனிதன்

மந்திரத்தால் மாயவித்தை
செய்குவது போன்று

மனிதரிலே தாழ்வுயர்வே
யில்லையெனச் செய்தீர்

சிந்தித்தால் இதுநடந்த
காலத்தை வியப்பால்

சிரம்சுற்றச் செய்திடுதே
ஆண்டவனின் தூதே

உந்தியெழும் புரட்சியென
இஸ்லாம்மதம் தந்த

உத்தமரே முஹம்மதரே
வாழியரோ வாழி.

# 97

அருளலின்றி யாரையுமே
சபித்தறியா அண்ணல்

அறிவிறைவன் இரண்டையுமே
நம்பும்என்ற ஆசான்

இருளகல விளக்கேற்றி
வைப்பதுபோல் இதய

இருளகலக் கல்விச்சுடர்
ஏற்றுமென்ற சீலர்

பொருளிருந்தால் அறவழியில்
தருமம்செய் திறைவன்

பேரருளைப் பெறுதல்கடன்
எனவுரைத்த வள்ளல்

மருளலின்றி ஆண்டவனை
யாவருமே சேர்ந்து

வணங்குமென்ற முஹம்மதரே
வாழியரோ வாழி.

பிறக்கும்முன் தந்தையரைத்
தானிழந்து புவியில்

பிறந்தசில ஆண்டிற்குள்
தாயாரை யிழந்து

சிறப்பான கல்வியின்றி
மாடாடு மேய்த்துச்

சுற்றத்தார் ஆதரவில்
அனுதையென வளர்ந்து

முறைப்படிக்குத் தொழில்செய்து
திருமணம்மு டித்து

மூவிரண்டு மகவுபெற்று
ஞானவழி சென்று

பெறற்கரிய நபிப்பட்டம்
பெற்றிட்ட யிறுதிப்

பெருநபியே முஹம்மதரே
வாழியரோ வாழி.

தனியவராய் ஆண்டவனை
நம்பிஇஸ்லாம் நெறியைச்

சாற்றிமற மாக்களிடம்
அடிபட்டு மேனி

இனித்தாங்கா தென்னும்நிலை
ஏற்பட்டும் இதயம்

ஏற்றதொரு கொள்கைதனை
விட்டுவில காமல்

முனைப்போடு செயல்பட்டு
வைதோரும் வாழ்த்த

முழுவெற்றி கண்டிஸ்லாம்
அரசாட்சி செய்ய

அனைத்துலகும் வானவரும்
போற்றும்படி வாழ்ந்த

அருநபியாம் முஹம்மதரே
வாழியரோ வாழி.

ஊர்நடுவே பழுமரத்தை
நட்டுவைத்தாற் போலே

உலகினிடை தீன் தருவை
நீர்நட்டு வைத்தீர்

ஊர்நடுவே நீர்நிலையம்
உண்டாக்கல் போலே

உத்தமரே உலகினுக்கு
நல்லிஸ்லாம் தந்தீர்

ஊர்நாடிச் செல்லுகின்ற
மரக்கலம்தன் திசையை

உணர்ந்துசெலக் கலங்கரைவி
ளக்கமைத்தாற் போலே

ஊர்நாடோ டுலகமெலாம்
சீர்திருந்த இஸ்லாம்

உவந்தளித்த முஹம்மதரே
வாழியரோ வாழி.

# பின்னுரை

தொல் பொருள் ... நூலகம்-சென்னை
எண் 8436
தேதி

புவிபோற்றும் முஹம்மதின்
தொண்டுகளில் துளியைப்

புகன்றுள்ளேன் அவர்செய்த
தனைத்தையுமே யெடுத்து

நவிலுதற்கு நானறிவு
பெற்றிருக்க வில்லை

நல்லோர்கள் வரைந்துள்ள
அவர்சரிதம் கூறும்

கவிகாமு ஷெரீபென்னும்
யான்செய்த யிந்தக்

கவின்நூலில் பிழைகண்டால்
பொறுத்திடுக மேலோர்

நவமான தீன்பயிரை
நட்டுவளர்த் திட்ட

நந்நபியின் வாழ்த்துப்பா
மாலையிது முற்றும்.

# பொது வாழ்த்து

இஸ்லாத்தின் நெறிநிற்போர்
வாழியரோ வாழி

இனியநபி வழிநடப்போர்
வாழியரோ வாழி

அஷ்ஹதுவல் லாயிலாஹ
இல்லல்லாஹ் என்னும்

அருங்கலிமா ஓதிடுவோர்
வாழியரோ வாழி

அஸ்ஸலாமு அலைக்குமெனச்
சலாம்சொல்லும் முஸ்லிம்

ஆனஅரும் சோதரர்கள்
வாழியரோ வாழி

தஸ்லிமுடன் தீனவர்க்கு
நங்நபிவாழ்த் துப்பா

தனையுரைத்தேன் படிப்பவர்கள்
வாழியரோ வாழி.

## சிறப்பான அணி

அவனிக்கு அருட்கொடையாய் வந்து தித்த அண்ணல் நபிகள் நாயகம் (சல்) அவர்களின் வாழ்வையும் வாக்கையும் நெஞ்சால் நினைந்து எண்சீர் விருத்தப் பாக் களில் புகழ் பாடி இருக்கிருர் கவி காமு ஷெரீப்,

இனிய தமிழ் நடையில் கவிதைகள் ஆர்த்து தமிழ் இலக்கியத்திற்கு சிறப்பான தொரு அணியை அணிவித்திருக்கிருர்.

இந்த நூலைப் படிக்கும் போது, நபிகள் நாயகம் அவர்களின் வாழ்வில் நடந்த அரிய நிகழ்ச்சிகளையும், அவர்கள் தம் அரிய போதனைகளையும் தெளிவாக, எளிதாகப் புரிந்துகொள்ள முடிகிறது

சமய உணர்வுடையோரிடம் மட்டுமல் லாது இலக்கிய ஆர்வம் படைத்த ஒவ்வொரு வர் கரங்களிலும் இல்லங்களிலும் வைத்துப் போற்றிக் காக்கப்பட வேண்டிய நூலாகும் இது.

கோலாலம்பூர் } ''தமிழ் முரசு'' (நாளேடு)
10—9—72 } கோலாலம்பூர்

## கவிஞரின் கைவண்ணம்

தத்துவக் கருத்துக்களை முத்தாரமாகத் தொகுக்கும் வித்தாரம் அறிந்த கவிஞரின் கை வண்ணத்தில் அற நெறிச் சாரமாக வடிவம் பெற்றுளது இந்நூல்.

இஸ்லாமிய மார்க்கம் பற்றியும் அதனை வளர்த்த இறைத்தூதர் சிறப்புப் பற்றியும் ஏனைய மதம் சார்ந்த பலரும் எளிதில் உணர்ந்து போற்றும் வண்ணம் தெள்ளெனத் தொகுக்கப் பெற்றுள்ள இப்பாமாலையில் நெஞ்சம் நிறையும் கருத்துக்கள் ஏகமாய் உள்ளன.

அரிய பெரிய கருத்துக்களை மிகவும் எளிய நடையில் சொல்லிப் புரிய வைத்திடும் கலையில் கவி காமு ஷெரீப் மகத்தான வெற்றி பெற்றுள்ளார்.

நபிகள் நாயகம் முஹம்மது (சல்) அவர்களின் வாழ்க்கையில் துளித்துளியாக நிகழ்ந்த சம்பவங்களைச் சுவையாகவும், அவையே மக்களுக்கு அறிவுரையாகவும் அமையும் வண்ணம் முழுதும் எண்சீர் விருத்தங்களாக உருப்பெற்றுள்ள இந்நூல் பயனுள்ள நூலே

இஸ்லாமியர்கள் மட்டுமின்றி தமிழன்பர்கள் பலரும் இந்நூலை வாங்கிப் படித்து இதன் அரிய கருத்துக்களில் பேரின்பம் உய்க்க வேண்டுகிறோம்.

கோலாலம்பூர்
30—7—72

''தமிழ் நேசன்'' (நாளேடு)
கோலாலம்பூர்.